விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272




# விடுதிகளில் தற்காலிகமாகத் தங்கியிருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது

## சொந்த இடங்களுக்குத் திரும்புமாறும் பணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் விடுதிகள் மற்றும் தற்காலிக வசிப்பிடங்களில் தங்கியிருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பல பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை முதல் லொட்ஜ்கள், தற்காலிக வசிப்பிடங்களில் தேடுதல் நடத்திய பொலிஸாரும் படையினரும் அவர்களைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகப் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனின் அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு வழங்கிய காலக்கெடுவுக்குள் ஐ.நா.ஸ்தாபனங்கள் வெளியேறிவிடும்

### மனித உரிமைகள் அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)

வன்னியிலிருந்து வெளியேறுவதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் மூன்று வார காலம் அனுமதி கோரியிருந்ததாகவும் அவர்களுக்கான கால அவகாசம் இம்மாதம் 29 ஆம் திகதியுடன் முடிபடைவதாகவும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வன்னியில் செயற்படும் அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் அதிரடிப் படையினர் இருவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகாஓயா பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொமாண்டோ அணி நடாத்திய தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அதியுச்சப் பாதுகாப்புப் பிரிவான மகாஓயாப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் அணி நேற்று காலை 7.30 மணியளவில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அந்த அணியினை வழிமறித்த விடுதலைப்புலிகளின் கொமாண்டோ அணியினர் தீவிர தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவத்தினர் இருவர் சம்பவ இடத்தில் கொல்லப்பட்டனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஐ.நா. பணியாளர்கள் வெளியேறுவதற்கு வழி ஏற்படுத்தித் தர புலிகள் இணக்கம்

### இன்று ஐ.நா. அமைப்புக்கள் வெளியேறுகின்றன

(கொழும்பு)

வன்னியில் மீதமுள்ள ஐ.நா. அமைப்பின் பணியாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான வழியை ஏற்படுத்தித் தருவதாக விடுதலைப்புலிகள் தங்களிடம் உறுதியளித்திருப்பதாக இலங்கையில் இருக்கும் ஐ.நா. மன்றத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான கோர்டன் வெய்ஸ் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருக்கு ஐ.நா. அமைப்புக்கள் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அரசு பிறப்பித்த உத்தரவை அடுத்து அப்பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஐ.நா.மன்ற அமைப்பின் பணியாளர்கள் ஏற்கெனவே அங்கிருந்து வெளியேறத் தொடங்கி விட்டனர்.

மீதமுள்ள ஐ.நா. அமைப்பின் பணியாளர்கள் அனைவரும் இன்று அங்கிருந்து வெளியேறப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இவர்கள் அங்கிருந்து வெளியேறக் கூடாது என்று கோரி கிளிநொச்சியிலிருக்கும் பொதுமக்கள் போராட்டங்கள் நடத்தி தடை ஏற்படுத்தி வந்தனர். இதைத் தொடர்ந்து ஐ.நா.மன்ற அதிகாரிகள் விடுதலைப் புலிகளிடம் பேசியதைத் தொடர்ந்து இவ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிறுவனங்களை வழி மறித்து 4 ஆவது நாளாகவும் நேற்று மறியல்

(கிளிநொச்சி)

வன்னிப்பிரதேசத்தில் இருந்து ஐ.நா. நிறுவனங்கள் வெளியேறக்கூடாது என வலியுறுத்தி வன்னிப் பிரதேசத்து மக்கள் மேற்கொண்டுள்ள மறியல் போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றதாக வன்னி தகவல்கள் தெரிவித்துள்ளன.

யு.என்.எச்.சி.ஆர். எனப்படும் ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரகம் மற்றும் ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமான அலுவலகங்களுக்கு எதிரிலேயே இந்த மறியல் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

வன்னிப் பிர (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களுக்கு உதவுவது குறித்து வவுனியாவில் நேற்று உயர்மட்ட மாநாடு

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் இருந்து ஐ.நா.அமைப்புக்களும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் வெளியேறத் தொடங்கியுள்ளமையை அடுத்து அந்தப் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவு மற்றும் நிவாரண உதவிகளை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து நேற்று வவுனியா செயலத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐ.நா. அமைப்புக்கள் உட்பட சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இராணுவ பொலிஸ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மனித உரிமை குழுவில் யுவதி உட்பட மூவர் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இளம் யுவதி ஒருவர் உட்பட மூவர் நேற்று சரணடைந்துள்ளனர். கைதடி வடக்கு, கைதடியை சேர்ந்த 20 வயதுடைய யுவதி தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து நேற்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளார்.

அதேவேளை புத்தூர் மேற்கு, நவக்கிரியை சேர்ந்த 31 மற்றும் 27 வயதுடைய சகோதரர்கள் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர். (ச-5)

## தமிழ் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தல்

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படைகளுக்குமிடையில் நடைபெற்று வரும் மோதல்களில் சிக்குண்டிருக்கும் பொதுமக்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கொழும்பு உறுதிப்படுத்த வேண்டும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

எமது கவலை குறித்து நாங்கள் ஏற்கனவே இலங்கை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம் என இலங்கை நிலைமை தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோது அமைச்சர் கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் இலங்கையிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

வன்னியிலி (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால் யாழ்.பல்கலையின் புகழ் மேலோங்கும்



## மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நம்பிக்கை

*நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் யாழ்.பல்கலைக் கழகம் மாற்றமடையும், அதன் புகழ், சிறப்பு மேலோங்கும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.*

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மிகவும் பிரபல்யமானது. ஆனால் தற்போது நாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அதன பிரபல்யம், சிறப்பு வெளிக் கொணரப்படவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமர நாயக்க நேற்று மாலை யாழ்.பத்திரிகையாளர்களுடன் சந்திப்பொன்றை நடாத்தினார்.

இதில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டாார்.

இச் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது,

தற்போது நாட்டில் காணப்படும் யுத்த சூழல் இல்லாவிடின் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் பிரபல்யமாக திகழ்ந்திருக்கும்.

நான் சப்ரகமுவ, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிற்கு சென்றுள்ளேன். ஆனால் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் வந்தபோது தான் பல்கலைக்கழகத்தின் சிறப்பை உணர்ந்தேன்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவராகிய பின் முதற்தடவையாக யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ளேன். நீண்ட காலமாக வரவேண்டும் என முயற்சித்தேன் ஆனால் முடியவில்லை. தற்போதுதான் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆனால் நான் இதுவரை பல்கலைக் கழக ஆணைக்குழுவின் தலைவராக பேராதனைப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஆகிய இரண்டுக்கும் செல்லவில்லை எனவும் அவர் குறிப்பிட்டர்ர்.

### இசற்ஸ்கோர் பிரச்சினை

இசற்ஸ்கோர் பிரச்சினை என்பது யாழ்ப்பாண மாணவர்கள், பெற்றோர்களால் எழுப்பப்படும் கேள்வியில்லை. நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களும் பெற்றோர்களும் தான் இது தொடர்பாக கேட்கின்றனர்.

குறிப்பாக மருத்துவத்துறைக்கு விண்ணப்பித்தவர்கள்தான் இசற்ஸ்கோர் தொடர்பில் பிரச்சினை எழுப்புகின்றனர்.

ஆனால் இசற்ஸ்கோரின் மூலம் இன, மதம் என்ற வேறுபாட்டுடன் நாங்கள் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு இசற்ஸ்கோரின் மூலம் பல்கலைக்கழகங்களிற்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது வெளிப்படையாகவே நடந்து கொள்கிறது.

இசற்ஸ்கோரின் அடிப்படையில், திறமை அடிப்படையில் 40 வீதமான மாணவர்களையும் சனத் தொகையின் அடிப்படையில் 55 வீதமான மாணவர்களையும் மிகுதி 5 வீதமான மாணவர்கள் கஷ்டப் பிரதேச ரீதியிலும் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

இக் கணிப்பீடானது கடந்த 1982 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட சனத் தொகையின் அடிப்படையிலேயே மேற்கொள்கின்றோம்.

மாறாக பழைய முறையான சனத் தொகையின் அடிப்படையில் கணிப்பீடு செய்தால் பாதிக்கப்படுவது வடக்கு கிழக்கு மாணவர்களே.

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் பீடங்களின் ஊடாக வெற்றிடங்களை நாம் பெற்றபோது 2008 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்காக 19 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு வெற்றிடங்கள் இருந்தன.

எனினும் நாம் இம்முறை 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். அதிலும் 21 ஆயிரத்து 200 மாணவர்களே தமது பதிவுகளை மேற் கொண்டுள்ளனர்.

2002 ஆம் ஆண்டு உலக வங்கியின் அறிக்கையில், இலங்கையின் சனத் தொகையில் 11.5 வீத மாணவர்கள் உயர் கல்விக்காக அனுமதககப்படுகின்றனா என குறிப்பிடப்பட்டது.

அதே சமயம் தெற்காசியாவில் அந் நாட்டு சனத் தொகையில் இந்தியா -11 வீதமும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் 11 வீதத்துக்கு குறைவான வீதத்தினரே உயர் கல்விக்காக அனுமதிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் மட்டும்தான் இலவசக் கல்வி-சுதந்திரமான கல்வி வழங்கப்படுகிறது.

### பல்கலைக்கழக மாணவர்களிடம் பிரதேசவாதம் இருக்கக் கூடாது

பல்கலைக்கழக மாணவர்களிடம் பிரதேச வாதம் இருக்கக் கூடாது என்பதையே நான் கருதுகிறேன்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை அங்கு முஸ்லிம் ஊழியர்கள், அதிக மானவர்கள் பணிபுரிகின்றனர். அத்துடன் முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

ஆனால் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு முஸ்லிம் மாணவர்கள் போக விரும்புவதில்லை. யாழ்.பல்கலைக்கழகத்திலும் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்பதற்கு அனுமதியளிக்கவேண்டும்.

ஆனால் ஊடகங்களின் பிரசாரங்களினால் சிங்கள மாணவர்களோ அல்லது முஸ்லிம் மாணவர்களோ இங்கு வருவதற்கு விரும்புவதில்லை.

இங்கு மற்ற இன மாணவர்களும் கல்வி கற்பதற்கு அனுமதியளிக்க மக்கள் தயாராகவே உள்ளனர். எனினும் ஊடகங்கள் அவற்றை வெளிப்படுத்துவதில்லை.

### யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்படுவதற்கு மனித வளம் இல்லாமல் தற்போதைக்கு முடியாது.

ஏற்கனவே மொறட்டுவ, பேராதனை மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களில் பொறியியல் பீடம் உள்ளபோது றுகுணு பல்கலைக் கழகத்திற்கு செல்வதற்கு மாணவர்கள் விரும்புவதில்லை.

குறிப்பாக தற்போது வெளிநாட்டுக்கு பட்ட மேற்படிப்பை மேற்கொள்ள சென்றால் மீண்டும் நாடு திரும்புவது குறைவு. இதனால் மனிதவளப் பிரச்சினையுண்டு.

### பிரச்சினை தீர்ந்தால் யாழ்.பல்கலைக்கழகம் மூன்று வருடங்களில் மாறும்

நாட்டில் நிலவும் பிச்சினைக்கு தீர்வுத காணப்பட்டால் யாழ்.பல்கலைக்கழகம் மாற்றமடையும். அதன் புகழ் -சிறப்பு மேலோங்கும் இதற்கு யாழ்.மக்கள் கல்வி மீது வைத்திருக்கும் அக்கறையும்- அர்ப்பணிப்பும் சான்று.

இதனாலேயே 1974 ஆம் ஆண்டு இங்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. காரணம் அப்போது இருந்த அக்கறை அவர்களிடம் தற்போதும் உணர்கிறேன்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் விரிவுரையாளர்கள் நாடு திரும்பினால் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியில் பீடம் ஆரம்பிக்கலாம்.

பெற்றோர்களும் மாணவர்களும் ஒன்றை உணரவேண்டும், எல்லாப் பல்கலைக் கழகங்களினாலும் வழங்கப்படும் பட்டம் ஒன்றுதான் என்றார். (ச-5)

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல்

(இராமேஸ்வரம்)

கச்சதீவு கடல் பகுதியில் மீன் பிடித்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி ஐஸ்பெட்டிகளை கடலில் வீசினர்.

இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து ஏராளமான விசைப் படகுகளும் நூறுக்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளும் மீன்பிடிக்கச் சென்றன.


நேற்று முன்தினம் பிற்பகல் கச்சதீவு கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை துப்பாக்கி மற்றும் இரும்புத் தடியால் தாக்கினர் என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடி வலைகளை வெட்டி படகிலிருந்த ஐஸ்பெட்டி மற்றும் மீன்பிடி சாதனங்களை கடலில் தூக்கி வீசினர். மேலும் இலங்கை கடற்பகுதிக்குள் வரக்கூடாது எனவும் எச்சரித்து விரட்டியடித்தனர்.

இலங்கை கடற்படையின் நடவடிக்கையால் நடுக்கடலில் படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி சேதமடைந்தன. உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் மீனவர்கள் பலர் மீன் பிடிக்காமல் மாலை 5 மணிக்கு இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-5)

# பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)



பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் தம்பியப்பா காங்கேசபிள்ளை நேற்றுடன் ஓய்வு பெற்றாார்.

37 வருட ஆசிரியர் சேவையில் 20 வருடங்கள் இவர் பலாலி ஆசிரியர் கலாசாலையின் கணித விரிவுரையாளராக, கணித பீடத்தின் தலைவராக, உபஅதிபராக, அதிபராக கடமையாற்றிய பெருமைக்குரியவர்.

மண்டைதீவை பிறப்பிடமாகக் கொண்ட காங்கேசபிள்ளை கணிதம் தொடர்பான கற்றலில் முதுமெய்யியல் மாணிப்பட்டத்தை பெற்றதுடன் கணிதம் கற்பித்தல் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கணித ஆசிரியராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)


# கம்பஹாவில் தேடுதல் 41 பேர் கைது

(கம்பஹா)

கம்பஹா பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது சந்தேகத்தின் பேரில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று வரையில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின்போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதோர், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டோர் உள்ளட்ட பலர் இந்தத் தேடுதல் வேட்டையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-5)





பலாலி ஆசிரியர் கலாசாலையின் கலாவதி புத்தக வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் வீற்றிருப்பதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## கலியுகம்

" அப்பா மகனைப் பார்த்து, கடைக்குப் போய் பேப்பர் வாங்கிக் கொண்டு வா!" என்கிறார். அதற்கு அவன் "வேற ஆளைப்பாருங்க" என்று சொல்லிவிட்டுப் போகிறான். "உங்கள் பிள்ளையே உங்களுக்கு இப்படி சொல்லிவிட்டுப் போகிறானே!" என்று கேட்டால் " அவனைச் சொல்லிக் குற்றமில்லை. கலிமுற்றி விட்டது" என்கிறார் அப்பா.

இந்த யுகங்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். வருடம் – மாதம் – வாரம் – நாள் இப்படி யுகங்கள் நான்கு. போன வருஷம் உன்னை சென்னையில் பார்த்தேன் என்று சொல்ல முடியும். ஆனால் போன யுகத்தில் நான் உன்னை அங்கு பார்த்தேன் என்று சொல்ல முடியுமா?

எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு "மேதாதிதி" என்பவர் தான் முதலில் விளக்கம் கொடுத்தார். அவரின் கணிப்பின்படி, கிருதயுகம் 4800 வருடம்; திரேதாயுகம் 3600 வருடம்; துவாபரயுகம் 2400 வருடம்; கலியுகம் 1200வருடம். சாஸ்திர ரீதியாக வேறு கணக்கு சொல்கிறார்கள் அவர்களின் கணக்கின்படி வருடம் 1000, 2000, 3000, 4000 என்று உள்ளது.

சுமார் 60 வருடத்திற்கு முன் பரமஹம்ஸ ஸ்ரீராஜ நாராயண்ஷட் சாஸ்திரி என்பவர் ஒரு நூல் எழுதினார். அதில் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். 1943 ஒகஸ்ட் முதலாம் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்து விட்டது என்கிறார். பாகவத சுலோகப்படி சூரியன், சந்திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்தில் ஒரே இராசியில் பிரவேசிக்கும் போது அல்லது சந்திரன், சூரியன், குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்தில் ஒரே ராசியில் ஒரே நேரத்தில் சேரும் போது கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரண யோகம் 1943 ஒகஸ்ட் முதலாம் திகதி வந்து விட்டது. அதுதான் இவர் சொல்லும் கணக்கு! இருந்தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100 வருடங்கள் ஆகுமாம். கிருதயுகத்தில் மக்களுக்கு நோய் வராதாம். அனைவரின் கோரிக்கையெல்லாம் பூர்த்தியாகுமாம்! மனிதர்களின் ஆயுள் 400 வருடமாம்! அதன் பின்னர் மறுபடியும் யுகம் மாற மாற – தர்மத்தின் அளவு குறைய குறைய ஆயுளும் குறையுமாம்! கிருத யுகத்தில் ஒரேமதம்! ஒரே கடவுள்! என்ற நிலைமைக்கு உலகம் வந்துவிடுமாம்! தருமரின் காலத்தில் நடந்த கதை ஒன்றும் உண்டு! அது துவாபர யுகத்தின் கடைசிக் கட்டம்.

அப்பொழுது ஒருவன் தனது நிலத்தை இன்னொருவனுக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதில் உழவு செய்ய ஆரம்பித்தான். நிலத்தை உழும்போது அதில் ஒரு புதையல் கிடைத்தது! உடனே அதை எடுத்துக் கொண்டு நிலத்தை விற்றவனிடம் போனான்.

"இதோ பாருங்கள்! இந்த புதையல் உங்களுக்குத்தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத் தான் என்னிடம் வீற்றீர்களே தவிர புதையலை அல்ல! அதனால் புதையலை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றான். ஆனால் அவன் அதை வாங்க மறுத்து விட்டான். "இந்தப் புதையல் உனக்குத்தான் சொந்தம் எப்பொழுது நிலத்தை விற்றேனோ அப்பவே இதையும் விற்றதாக அர்த்தம்!" என்றான்.

இருவரும் தருமரிடம் போய் தங்களுடைய பிரச்சினைகளை சொல்கிறார்கள்! என்ன தீர்ப்பு வழங்குவது என்று தெரியாமல் முழித்தார் தருமர். கடைசியில் ஒரு பத்து நாள் கழித்து வரச்சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். அதற்குள் கலியுகம் பிறந்து விட்டது! அதன் பின்னர் இருவரும் வந்தனர்.

நிலத்தை விற்றவன் புதையல் எனக்குத்தான் சேர வேண்டும் என்கிறான். வாங்கியவன், "அதெல்லாம் கிடையாது... எப்பொழுது நிலத்தை விற்றாரோ அப்பொழுதே புதை யலையும் விற்றுவிட்டார் என்று அர்த்தம் என்கிறான்!

தருமர் சிரிக்கிறார். கலியுகம் பிறந்து விட்டது என்பதை உணர்கிறார். ஒருவர் கத்தரி விதை. வாங்கிக் கொண்டு வந்தார். அதை தனது நெருங்கிய சிநேகிதனிடம் கொடுத்து உங்கள் தோட்டத்தில் போடுங்கள். என்றார்.

"காசு எவ்வளவு" என்றார் இவர். "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார் அவர். ஒரு நாள் தற்செயலாக நண்பரைப் பார்க்கவந்தவர், "கத்தரி எப்படி இருக்கிறது" என்றார் நண்பர்.

"நன்றாக காய்த்திருக்கிறது" என்றார் நண்பர். அப்படியா.... "ஒரு நான்கு காய் கொடுங்கள்... வீட்டுக்குக் கொண்டு போக"... என்று கேட்டார். அதற்கு அவர், "அய்யய்யோ! காயெல்லாம் முற்றி விட்டதே" என்றார்.

இவருக்கு முகம் வாடி விட்டது. திரும்பி வரும் போது, உண்மையை அறிவதற்காக அந்த ஊர்க்காரரைப் பார்த்து,. "அதோ அந்த வீட்டில் கத்தரிக்காய் முற்றிவிட்டதா" என்று விசாரித்தார். அதற்கு அவர் "காய்முற்றவில்லை... கலிமுற்றிப் போச்சு!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மருந்து, உணவுப் பொருட்களை அனுப்ப மறுக்கும் இந்தியா இனப்படுகொலைக்கு உதவுகிறது

## எதிர்காலத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தும் என்கிறார் வைகோ


(மதுரை)

இலங்கை இராணுவத்துக்கு ராடர் வழங்குவது, ஆயுதங்கள் கொடுப்பது, விமானிகளை அனுப்பி வைப்பது என இந்தியா பல உதவிகளைச் செய்கிறது. அங்குள்ள மக்கள் சாப்பாடு, மருந்தின்றி உள்ளனர். இங்கு சேகரித்த மருந்து, உணவுப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கைக்கு அனுப்ப அனுமதி மறுக்கும் மத்திய அரசு, அங்கு நடக்கும் இனப் படுகொலைக்கு உதவுகிறது. இது எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார். சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது, அண்ணாத்துரை ஆரம்பித்த இயக்கத்தை தந்திரமாக கருணா நிதி வசப்படுத்தி குடும்ப சொத்தாக்கி விட்டார். இதை மீட்பது தான் எங்கள் இலட்சியம். அணுசக்தி ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே எதிர்த்து வருகி றோம். அணுச் சோதனை செய்வது நமது உரிமை. அதை மற்றொரு நாட்டிடம் ஒப்படைப்பதா? இந்தியாவின் இறையாண்மையை அடகு வைத்து விட்டனர்.

இலங்கை ராணுவத்திற்கு ராடர் கருவி கொடுப்பது, ஆயுதங்களை வழங்குவது,விமானிகளை அனுப்பி வைப்பது என இந்தியா பல உதவிகளை செய்கிறது. செப்., 9இல் இலங்கை இராணுவத்திற்கும், விடுதலை புலிகளுக்கும் நடந்த சண்டையில் இந்தியா கொடுத்த ராடர் கருவி சேதமடைந்தது. அப்போது பணியில் இருந்த இந்தியர்கள் தாகூர், ரவுர் ஆகியோர் காயமடைந்தனர் இவ்வாறு வைகோ கூறினார். (அ-6)



# ஹக்கீமின் ஏனைய மதங்கள் மீதான அபிமானத்துக்கு சர்வதேச இந்து மதபீடம் பாராட்டு

(கொழும்பு)

தெற்கில் இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு மத ரீதியான ஒடுக்குமுறை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு சர்வதேச இந்து மத பீடம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் ஆர். பாபு சர்மா விபரிக்கையில்,

நெருக்கடி மிக்க இது போன்ற சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினர் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அழைப்பு விடுத்துள்ளமையானது சமூகங்களிடையே சுமுகமான ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற அவரது உயர்ந்த மனப்பாங்கை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

முஸ்லிம் சமூகத்தையும் இஸ்லாம் மதத்தையும் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினரான ஹக்கீமிடம் காணப்படும் இந்த பரந்த மனப்பாங்கு ஏனையோரிடமும் ஏற்பட்டால், நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனங்களுக்கிடையிலான கசப்புணர்வு மற்றும் காழ்ப்புணர்வு என்பன குறைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

அதேசமயம் மதங்களிடையே ஒற்றுமையைப் பேணிப் பாது காப்பது மதகுருமாரின் கடமையாக உள்ளதுடன் மதங்களுக்கிடையே பூசல்கள் ஏற்படாமல் தடுப்பது அரசாங்கத்தின் தார்மிக பொறுப்பாகும் என்று கூறினார். (அ-6)

# சாமாதானத்தை நிலைநாட்ட ஜனாதிபதிக்கு சட்டத்தரணிகள் சங்கம் பூரண ஆதரவு

(கொழும்பு)

வடக்கில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் பூரண ஒத்துழை ப்பு வழங்கும் என தெரிவித்துள்ளது. சட்டத்தரணிகள் சங்க உறுப் பினர்கள் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியை சந்தித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளனர். சட்டத்தரணிகள் தொழில் ரீதியாக எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் இந்த சந்திப் பின் போது கலந்துரையாடப்பட் டுள்ளது.

இதன்போது, சட்டத்தரணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக் கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி நீதியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-6)

# இராசி பலன்

16.09.2008
(ஆவணி 31, செவ்வாய்க்கிழமை)
உத்தரட்டாதி முன்னிரவு 11.27 மணிவரை
பிரதமைபிற்பகல் 2.14 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை
சுபநேரம்-10.33-12.03 மணிவரை
மஹாளயபக்ஷாரம்பம்

| | |
|---|---|
| மேடம் | சோம்பல்நிலை, குடும்பக் கவலை, முயற்சிதாமதம், |
| இடபம் | நண்பர்கள் உதவி, குடும்பசுகம், சயனசுகம், தனவருவாய் |
| மிதுனம் | எடுத்த கருமங்கள் கைகூடும், நன்கொடை, அதிகாரம், பிறர்உதவி. |
| கடகம் | எதிர்பாரத செலவு, பிரயாணம், தொழில் மந்த நிலை, வீண்பயம். |
| சிங்கம் | கடன் பிரச்சினை, வாகனபயம், காரிய தடங்கல், தர்மம். |
| கன்னி | மனோதைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை. |
| துலாம் | அதிக பிரயாசை, போசனநன்மை, சத்துரு ஜெயம், உடல் நலம் |
| விருச்சிகம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பூர்வ புண்ணிய கருமம். |
| தனுசு | மனச் சுஞ்சலம், முயற்தாம தம், போசன சுகம், சுபசெலவு. |
| மகரம் | பிரயாண நன்மை, காரிய சித்தி, கீர்த்தி, உறவினர் உதவி. |
| கும்பம் | கடினவார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், மாதர் உதவி. |
| மீனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, கலந்துரையாடல், போசனசுகம். |

வளவன்

# மது போதையில் வாகனத்தைச் செலுத்திய பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்

(கொழும்பு)

மருதானையில் மது போதையுடன் வாகனத்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்திய பொலிஸ் அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

மருதானைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்ற வாகனவிபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்த பொலிஸ் அதிகாரி றொக்கப் பிணையிலும் சரீரப்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வெள்ளவத்தை நோக்கி சென்று கொண்டிருந்த பொலிஸ் ஜீப் வண்டி மற்றும் மாலிகாவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனமொன்றும் நேற்று முன் தினம் அதிகாலை 3.30மணிய ளவில் மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளன. விபத்து இடம் பெற்ற போது வாகனத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் சிறு குழந்தை யொன்றும் உட்பட மூவர் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான ஜீப்வண்டியின் சாரதியான பொலிஸ் அதிகாரி மது போதையில் இருந்தமை தெரியவந்தமையையடுத்து அப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற மரு தானைப் பொலிஸார் விபத்தில் சிக் கிய ஜீப்வண்டியின் சாரதியை கைது செய்துள்ளனர். (அ-6)

# அமெரிக்காவில் இந்திய மாணவி கொலை

(அமெரிக்கா)

அமெரிக்க பல்கலைக் கழகங்களில் படிக்கும் இந்திய மாணவர்கள் சுட்டுக்கொல்லப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஈரோட்டைச் சேர்ந்த பேராசிரியர் வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஆண்டில் ஆந்திராவைச் சேர்ந்த 2 ஆராய்ச்சி மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்நிலையில் இப்போது ஒரு இந்திய பெண் டாக்டர் சுட்டுக்கொல்லப்பட்டார் .அந்த பெண் டாக்டர் பெயர் சௌமியா ரெட்டி (வயது 23) ஆந்திர மாநிலம் அடிலாபாத்தைச் சேர்ந்தவர் இந்தியாவில் எம்.பி.பி.எஸ். டாக்டர் படிப்பு முடித்து முதுகலைப்பட்டப்படிப்புக்காக அமெரிக்கா சென்றார் .சிகாகோவில் மருத்துவ மேல்படிப்பு படித்து வந்தார்.

சம்பவத்தன்று பல்கலைக்கழக வளாகத்துக்கு அருகே ஒரு காரில் சௌமியா பிணமாக கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. கறுப்பின வாலிபர் ஒருவர் அவரை சுட்டுக்கொன்றதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## வட்டு இந்து நவோதய மாணவன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு



(சித்தன்கேணி)

யா/வட்டு இந்து நவோதயாக் கல்லூரி மாணவன் செல்வன் சத்தியவாகீஸ்வரன் ரவி கரன் வட மாகாணத் தமிழ் மொழித் தினப் போட்டியில் தனி இசை யில் பிரிவு –4இல் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

இக் கல்லூரி சங்கீத ஆசிரியை திருமதி விஜயலட்சுமி இராசநாயகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் இவர் பயிற்சி பெற்று வருகின்றார். (அ–17)

## பதவியுயர்வுப் பரீட்சைகளுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு 1, அதி சிறப்புத் தரம் மற்றும் இலங்கை நிர்வாகசேவை ஆகிய பதவியுயர்வுப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கென பிரத்தியேக வகுப்புக்களை வார விடுமுறை நாட்கள் மற்றும் பொது விடுமுறை தினங்களில் துறைசார்ந்த அனுபவம் மிக்க விரிவுரையாளர்களைக் கொண்டு நடாத்துவதென மத்திய –மாகாண அரசமுகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் விசேட வகுப்புக்களை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், மற்றும் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக மேற்குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளைச் சேர்ந்தவர்கள் தமது அலுவலக மற்றும் நிரந்தர வதிவிட முகவரிகள் உட்பட தேவையான சகல விபரங்களையும் உடனடியாக ''தலைவர், மத்திய –மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம்'' மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மத்திய –மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் தலைவர் இ. இரத்தினசிங்கம் கேட்டுக்கொள்கின்றார்.

ஒவ்வொரு இடத்திற்கும் போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அருகில் உள்ள இடத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ–6)

## கிராம அலுவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நெடுந்தீவு, நல்லூர், சங்கானை, தெல்லிப்பழை, கரவெட்டி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு/ பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள், யாழ். மாவட்டச் செயலகத்தில் இம்மாதம் 29,30 ஆம் திகதிகளில நடைபெறவுள்ளன. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் அவர்களின் தனிப்பட்ட விலாசங்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (அ–6)

## நியமனம்


(சித்தன்கேணி)

யாழ்.மாநகரசபை சித்த மருத்துவ பதில் பிரதம சித்த மருத்துவ வைத்திய அதிகாரியாக டாக்டர் பரமநாதன் சுரேசன் நியமனம் பெற் றுள்ளார். இவர் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி பட்டதாரியாவர். (அ–17)

* * *

(சித்தன்கேணி)

கைதடி சித்த போதனா வைத்திய சாலையில் பதில் சித்த மருத்துவ வைத்திய பொறுப்பு அதிகாரியாக திருமதி டாக்டர் பிரேம சிவ சண்முகராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி பட்டத்தையும் இந்தியாவில் சித்த மருத்துவ பட்டபின் எம்.டி. பட்டத்தையும் பெற்றவராவர். (அ–17)




## கரவெட்டி பிரதேச செயலகத்தில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு நடமாடும் சேவை

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவின் காலங் கடந்த பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடபிராந்திய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி ம. இராஜரட்ணம் கலந்துகொள்ளவுள்ள இந் நடமாடும் சேவையில் உத்தியோக வலுச்சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோர் தமது விண்ணப்பங்களை கரவெட்டிப் பிரதேச செயலகப் பதிவாளர் கிளையில் உடனடியாக சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (அ)

## இடமாற்ற சபைக்கூட்டம்

வடமராட்சி கல்வி வலய இடமாற்ற சபைக் கூட்டம் இம்மாதம் 22ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது என பிரதிக் கல்விப் பணிப்பாளர்(கல்வி நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (அ–19)






## தசாஹாதி கிருஹயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்,

**பிரம்ம ஸ்ரீ ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா பிரம்மஸ்ரீ ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ்**

அவர்கள் கடந்த ஆவணி மாதம் 22ம் நாள் (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை சிவயோக சாயுத்யம் அடைந்த எனது மகள்,பேரன் ஆகியோரின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு பின்வரும் கிரியைகள் நடைபெறும்.

ஆவணி 31ம் நாள் (16–09–2008) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தசாகம்
புரட்டாதி 1ம் நாள்(17–09–2008) புதன்கிழமை காலை 9.00மணிக்கு ஏகோதிஷ்டம் மாசியம்
புரட்டாதி 2ம்நாள்( 18–09–2008) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சபீண்டிகரணம்
புரட்டாதி 3ம் நாள்(19–09–2008) வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு கிருஹயக்ஞம்

மேற்படி ஆத்மசாந்தி கிரியைகள், பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் தாங்களும் கலந்து ஏகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.


(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)


நாகேந்திரபீடம்
"மயூரிவாசம்"
48,2ம் ஒழுங்கை,
பிறவுன்வீதி -நீராவியடி.
யாழ்ப்பாணம்.

வைதிக குரு
பிரம்மஸ்ரீ ஐ.ஞானக்குருக்கள்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

இங்ஙனம்
நா.அமிர்தாம்பிகை அம்மா
நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்

(1674)





நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவின் போது பஞ்சமுக விநாயகப் பெருமான் தேரில் ஆரோணிகப்பதற்காக எழுந்தருளும் காட்சியையும் விநாயகப் பெருமான், முருகப்பெருமானின் சித்திரத் திருத் தேர்கள் வீதிவலம் வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

## வேம்படி மகளிர் கல்லூரியில் இன்றும் நாளையும் புத்தாக்கக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக் குழுவும், கல்வி அமைச்சும் இணைந்து நடத்தும் புத்தாக்கக் கண்காட்சி இன்றும், நாளையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுகிறது.

இக் கண்காட்சியின் இரண்டாவது நாளான நாளை காலை 8.30 மணியளவில் ''புலமைச் சொத்து'' பற்றிய கருத்தரங்கு ஒன்றும் நடைபெறவுள்ளது.

இதில் ''புலமைச் சொத்து பற்றிய அறிமுகம்'' என்ற தலைப்பில் யாழ் .பல்கலைக்கழக பௌதிக்வியல் துறைத் தலைவர் கலாநிதி நா. சிவயோகனும், ''சொத்துரிமை எடுப்பது எப்படி?'' என்ற தலைப்பில் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலக அதிகாரியான திருமதி நந்தி இராஜரட்ணம் உரையாற்றவுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கலாநிதி நா. சிவயோகன் கேட்டுள்ளார். (அ)

# நோத்முதல் கோபல்லவா வரை 100



### முதலாம் மகா யுத்த காலம்

ஆள்பதி மக்கலத்துக்குப் பின்னர் சேர் றோபேட் சாமேஸ் அவர்கள் ஆள்பதியாக 1913 இல் இங்கே வந்தார். சாமேஸ் அவர்கள் பாளிமொழியை நன்கு கற்றுப் புலமை வாய்ந்தவராயிருந்தார் என்றும், புத்தசாதகக் கதைகள் பலவற்றைச் சுத்தமான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் என்றும் கூறுவர். அவர் நிதியியல் நிபுணன் எனவும் பெயர் பெற்றிருந்தார். பரிபாலன அலுவல்கள் அவருக்கு நன்கு தெரிந்த விடயங்களாயிருந்தன. அவர் சிறந்த பேச்சாளியாயிருந்தமையால் கலைக் கூடங்களில் உயர்தரக் கல்வியைப் பற்றி ஓயாது பேசிப் புத்த பிக்குகளின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

இலங்கைக்குச் சர்வகலாசாலை அத்தியாவசியமென்றும் அதனை நிறுவும் வரை சர்வகலாசாலைக் கல்லூரியொன்றை நிறுவி, அதனை இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போட் சர்வகலாசாலையோடு இணைத்தல் வேண்டும் எனவும் சாமேஸ் முயற்சி செய்தார். அதற்குள் முதலாம் மகாயுத்தம் மூண்டெழுந்ததால் அது பற்றிய வேலைகள் கைவிடப்பட்டன.

நாட்டபிமானம் மிக்க சாமேசின் இரு மைந்தர்களும் யுத்த காலத்தில் படையில் சேர்ந்து பணியாற்றினர். அவர்கள் இருவரும் போர்க்களத்தில் உயிர்விட்டமை சாமேஸ் அவர்களுக்குப் பெரிய இழப்பாக இருந்தது. அதே காலத்திலேதான் இலங்கையில் சிங்களவருக்கும் சோனகருக்குமிடையில் 1915 ஆம் ஆண்டில் இனக் கலவரமும்

**மீள் பார்வை**




டி.சி.சேனாநாயக்க, டி.எஸ்.சேனநாயக்க,எப்.ஆர்.சேனாநாயக்க -காரீய சுரங்க உரிமையாளரும் பெருந்தோட்டத்துறை மற்றும் றேந்தை பின்னல் தொழிற்துறை வர்த்தகரான ஸ்பேட்டர் சேனநாயக்கவின் மூன்று பிள்ளைகளாவார்கள். மூத்தவரான டி.சி.குடும்பத்தின் வர்த்தகத்தில் கவனம் செலுத்தியதால் அவர் "கொழும்பு ஜோன்" என அழைக்கப்பட்டார். கல்வித்துறையிலோ அல்லது வேறு எந்த வர்த்தகத் துறையிலோ ஈடுபடாது வெறுமனே சுற்றித்திரிந்த இரண்டாவது மகன் அவர் "கலே ஜோன்" (காட்டு ஜோன்) என அழைக்கப்பட்டார். வெளிநாட்டு கல்வியினைப் பெற்று நாடு திரும்பிய எப்.ஆர்."லண்டன் ஜோன்" என அழைக்கப்பட்டார். இவர்கள் மூவரும் 1915 இல் இடம்பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது கைது செய்யப்பட்டு 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தனர்.


நடைபெறலாயிற்று.


ஒரு நோயிலும் பார்க்க அதற்குக் கொடுக்கப்பட்ட மருந்து ஆபத்தை உண்டாக்கியமை போலக் கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் கையாண்ட வழி வகைகள் பேராபத்தை விளைவித்தன. அத்தோடு மகாயுத்த நெருக்கடியும் இருந்தபடியி னாலே ஆங்கிலேயர் நிலைமையைத் தவறாகவே கருதித் தீவிர நடவடிக்கைகளை அவசரத்தில் கையாளுவாராயினர்.

**க.சி.குலரத்தினம்**

இந்தியாவில் அக்காலத்தில் இருந்த தலைசிறந்த நியாயவாதியான ஏட்லி நோட்டன் என்ற பெரியார் இலங்கையில் கைதியாக்கப்பட்ட பெரியவர்கள் சார்பில் வழக்குப் பேச வந்தார். அவர் குடியேற்ற மந்திரியார் பொனர்லோ என்பாருக்கு இலங்கை அரசாங்கத்தின் போக்கைப் பற்றி விபரமாக எழுதினார். "பிரித்தானியரின் அருமை பெருமைகளையெல்லாம் இலங்கையில் வெள்ளைக்காரன் ஒருவர் மதிப்பில்லாமல் செய்தது மல்லாமல் வெறுக்கத்தக்கதாக அலுவல்களைச் செய்தவராயும் இருந்தால் அவரே இன்றைய இலங்கை ஆள்பதியாவர். (தொடரும்)







காரைநகர் தங்கோடை நாகம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ இறுதிநாள் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது உற்சவ குரு சிவஸ்ரீ தே.சோமசுந்தரக் குருக்கள் வசந்தமண்டபப் பூசையில் ஈடுபட்டிருப்பதனையும் விசேட மங்கள இசையுடன் அம்பாள் வீதியுலாவிற்கு சப்பறத்தில் எழுந்தருளி இருப்பதனையும் படங்களில் காணலாம்

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# தொல்லியல் நோக்கில் 6

# கந்தரோடையும் கதிரமலையும்



சங்க காலப் பாண்டிய நாணயம் கந்தரோடை

ஆய்வுக் குழியில் பெறப்பட்ட பெருங்கற் காலச் சின்னங்களுள் கறுப்பு, சிவப்பு நிற மட்பாணடங் கள், மட்பாண்ட குறியீடுகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கன. மட்பாண்டங்களில்குவளைகள், வட்டில்கள்,பானைகள், பெருமளவு கிடைத்தன.இதே வடிவமைப்பில் அநுராதபுரம், பொன்பரிப்பு, குருகல்கின்ன, திபுல்வேவ, மக்கேவத்த ஆகிய பெருங் கற்கால மையங்களில் கிடைத்த மட்பாண்டங்களை ஒத்தன. இவ்வொற்றுமை கந்தரோடையில் பெருங்கற் கால மக்களும் தென்னிந்திய திராவிட மக்களும் ஒரே இனத் வராக அல்லது நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

இந்த அகழ்வில் பெருமளவு மணிகள் பெறப்பட்டன. இவை கார்னேலியன், அகெட், லபிஸ்வசலி,அமேதிஸ்ட்,கண்ணாடி போன்ற மூலப் பொருட்களால் ஆனவை. இவற்றுள் தமிழில் சூதுபவளம் என அழைக்கப்படும் கார்னேலியன் மணிகள் பெருமளவில் கிடைத்துள்ளன. இவற்றுடன் இரும்பு, செம்பு, வெண்கலம் ஆகிய உலோகத்தினால் செய்யப்பட்ட கரு விகள், திரிசூலம் வெண்கலத்தால் ஆனவேல் போன்ற உருவம், வெண்கல மைக்குச்சி கள் என்பனவும் பெறப்பட்டன. வெண்கல மைச்குச்சி ஒன்றில் நெல் உமியின் படிவம் பெறப்பட்டது. இச்சான்று கந்தரோடையில் வாழ்ந்த பெருங் கற்கால மக்கள் நெல் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதை மேலும் உறுதிப் படுத்தும் வகையில் இச்சின்னங்களுடன் மிருக எலும்பின் பாகங்கள் பெறப்பட்டன. இவற்றுள் மாட்டின் எலும்புகள் கூரிய ஆயுதங்கள் கொண்டு வெட்டப்பட்டதாக உள்ளது. இம் மிருகங்கள் உணவுக்காகவும், பயிர்செய்கைக்காகவும் வளர்க்கப்பட்டிருக்கலாம் சிற்றம்பலம் 1993.11.12).

விமலாபேக்லே இங்கு கிடைத்த பெருங் கற்காலச் சின்னங்களை முறையான காலக் கணிப்புக்கு உட்படுத்தாத நிலையில் இப் பண்பாட்டின் தோற்ற காலம் கி.மு.4 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றார். இவ்வாய்வில் பங்கெடுத்த மற்றொரு உறுப்பினரான பென்னற் புறோசன்(Bennat Bronson) இங்கு கிடைத்த சில சான்றுகள் $C^{14}$ காலக் கணிப்புக்கு உட்படுத்திய போது அவற்றில் இருசான்றுகளின் காலம் கி.மு.100 ஆண்டுகளாகவும், ஏனையவை பெரும்பாலும் கி.மு. 500க்கும் கி.மு.100க்கும் இடைப்பட்ட காலமாகவும் கணிக்கப்பட்டன. (Ragupathy 1987) இவற்றில் இருந்து



அகழ்வின் போது வெளிவந்த பௌத்த தூர்பிகள் கந்தரோடை

இலங்கையின் புராதன தலைநகரான அனுராதபுரத்தைப் போல் கந்தரோடையும் பண்டுதொட்டு பெருங் கற்கால குடியிருப்பைக் கொண்ட பகுதியாக இருந்தது எனலாம்.

இந்த அகழ்வின் போது வரலாற்றுதய காலச்சின்னங்களின் மேற்படையில் வரலாற்றுக்காலச் சின்னங்கள் பெறப்பட்டன. இதில் மூன்றாவது கலாசாரப் படையில் கறுப்பு, சிவப்பு நிற மட்பாணடங்களுடன் உரோம, மட்கலன்கள், பிராமி எழுத்து பொறித்த மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் என்பனவும் நான்காவது கலாசாரப் படையில் பௌத்த அழிபாட்டுச் சின்னங்களும் பெறப்பட்டன.(Senviratne 1984. 243.) பெருங் கற்கால பண்பாட்டிற்குரிய வரலாற்று உதய கால மக்களே வரலாற்றுக் காலத் தையும் வளர்த்தெடுத்தனர் என்பதை இவ் விரு கலாசார சின்னங்களுக்கு இடையே உள்ள தொடர்ச்சி சுட்டிக்காட்டுகின்றது. வரலாற்றுக் கால சின்னங்களுடன் பலவகை மட்பாண்டங்கள் பெறப்பட்டன. இதில் சிறப் பாக குறிப் பிடத் தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த அனைத்து மட்பாண்ட வகைகளும் கந்தரோ டையில் பெறப்பட்டதாகும். இங்கு கிடைத்த மிதமான சான்றுகள் குடாநாட்டின் தலை மைக் குடியிருப்பாகக் கந்தரோடையைக் கருத இடமளிக்கின்றது.

**தமிழரின் தொன்மையும் கந்தரோடையும்**

தென்னிந்தியா அதிலும் குறிப்பாக தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த நுண்கற்கால பண்பாட்டிற்குரிய ஆதி ஒஸ்தலோயிட் பெருங் கற்கால பண்பாட்டிற்குரிய திராவிடர் ஆகிய இன மக்களின் வழிவந்தவர்களே மொழியடிப்படையில் தற்காலத்தில் இனம் காணப் படும். தமிழ், சிங்கள மக்கள் என்பது அண்மைக்கால தொல்லியல், மானிடவியல், சமூகவியல் ஆய்வால் வலுப்பெற்று வரும் கருத்தாகும். இதை உறுதிப்படுத்துவதாக பெருங் கற்கால மையங்களிலும் அதன் சுற்றாடலிலும் கண்டுபிடிக்கப்பட்ட 2000 இற்கு மேற்பட்ட பிராமிக் கல் வெட்டுக்கள் விளங்குகின்றன. இவை ஓரிருவரிகளில் மன்னன் தொட்டு மக்கள் வரை பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக் கூறுகின்றன. இக்கல்

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**

வெட்டுக்கள் கி.மு.3ஆம் நூற்றாண் டிற்கும் கி.பி.4 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப் பட்ட காலத்தில் பயன்பாட்டில் இருந்ததால் இவை அக்காலப் பகுதிக்கு உரிய எழுத்து மொழி, மதம், சமூகம், அரசியல், பொருளாதாரம், இடப்பெயர்வு என்பவற்றை அறிப் பெரிதும் உதவுகின்றன. (தொடரும்)

# பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் ஆயுத உதவி; மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்

## அமெரிக்க தலைவர்கள் கருத்து

(நியூயோர்க்)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக,



பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் ஆயுத உதவி இந்தியாவுடன் பதட்டம் அதி கரிக்க வழி செய்யும் என அமெரிக்க ஜன நாயகக் கட்சித் தலைவர்கள் கருத்து தெவித்துள்ளனர்.

சர்வதேச பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கா கடந்த மே மாதம் கணிசமான நிதி ஒதுக்கி, ஈராக் ஆப்கானிஸ் தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு வழங்க முடிவு செய்தது. இத்தோடு அதி நவீன ஆயுதங்களையும் விநியோகம் செய்ய முன் வந்தது. அமெரிக்க அரசின் இந்த நடவடிக்கையால் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் பயன் பெறலாம். ஆனால் பாகிஸ்தா னுக்கு அளிக்கப்படும் ஆயுத உதவியால் இந்தியாவுடன் பதட்டத்தை அதிகரிக்கவே வழிசெய்யும். எனவே பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆயுத உதவியை புஷ் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கலிபோர்னியாவைச் சேர்ந்த ஜனநாயகக் கட்சித் தலைவர் ஹவார்ட் பெர்மனும், வெளிவிவ காரத்துறை கமிட்டி உறுப்பினர் நீட்டா லோவியும் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ-6)

# உலக தரிசனம்

## 5இலட்சம் பழங்குடி மக்கள் தலிபான் இயக்கத்தில் இணைவு

பாகிஸ்தானில் அனுமதியின்றியே அந்த நாட்டுக்குள் புகுந்து அமெரிக்கா தாக்குதல் நடத்துவதால் அமெரிக்க இராணுவத்தினரை சுட்டு வீழ்த்துவோம் என்று பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்க இராணுவம் குண்டு வீசியதில் அப்பாவி பொது மக்களும் பலியாகி வருகின்றார்கள். தீவிர வாதிகளுக்கு பழங்குடி இனத்தவர்களும் ஆதரவுஅளித்து வந்தனர். அமெரிக்காவின் நடவடிக்கையால் அந்த பழங்குடியினர் ஆத்திரமடைந்துள்ளனர்.

அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்துவதால் அந்தபழங்குடியினர் தலிபான் இயக்கத்தில் சேர்ந்து அமெரிக்காவுக்கு எதிராகப் போரிடப்போவதாக அறிவித்துள்ளனர். 10 இலட்சம் பேரில் 5 இலட்சம் பழங்குடியினரை தலிபான் இயக்கத்தில் சேர முடிவு செய்துள்ளனர்.

இதனால் தலிபான் தீவிரவாதிகளின் கை ஓங்குகிறது அமெரிக்க இராணுவத்திற்கும் பாகிஸ்தானுக்கும் இதுநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (அ-6)

## செனகல் ஜனாதிபதிக்கு எதிராக செய்தி வெளியிட்ட பத்திரிகைத் தலைவருக்கு மூன்று வருட சிறை

செனகல் ஜனாதிபதி அப்தோலாயே வாட்டிற்கு எதிரானகட்டுரை யொன்றை பிரசுரித்தமைக்காக அந்நாட்டு பத்திரிகையொன்றின் தலைவருக்கு 3வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

24ஹெயுரெஸ் சரோனோ என்ற செய்திப் பத்திரிகையின் தலைவரான எல்மாலிக் செக்கே இவ்வாறு சிறைத் தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

அத்துடன் மேற்படி பத்திரிகைய்யை வெளியிடவும் 3மாத காலத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐவரி கோஸ்ட் வங்கியொன்றில் இடம் பெற்ற பண மோசடியில் ஜனாதிபதியும் அவரது மகனும் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டி கட்டுரை வெளியிட்டமைக்காக கடந்த மாதம் எல் மாலிக்செக் கைது செய்யப்பட்டார்.

மேற்படி கட்டுரையில் பிரசுரிக்கப்பட்ட விடயங்கள் பொய்யானவைஎன செனகல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் தலைநகர் டாகரில் உள் ள நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட எல்மாலிக் செக் மீது தவறான செய்தியை பிரசுரித்த பொதுமக்களிடையே குழப்ப நிலையை தோற்று வித்ததாககுற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.




இது தொடர்பில் மேற்படி பத்திரிகையின் ஆசி ரியர் சம்போவு பியாகியி விபரிக்கையில்,

எமது பத்திரிகை நாட்டை ஆட்சி செய்ப வர்களின் தவறான செயற்பாடுகளை பகிரங்கப் படுத்தியமைக்காகவே இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார் (அ-6)

## எஜமானி கொலை வழக்கில் , வளர்ப்பு நாய் கொலையாளியை அடையாளம் காட்டியது

(பரீஸ்)

பிரான்சில் ஒரு கொலை வழக்கில் முக்கிய சாட்சியாக வளர்ப்பு நாய் சேர்க்கப்பட்டு



சாட்சி அளித்தது. பரீஸ் நகரில் ஓர் அடுக்கு மாடி குடியிருப்பில் 59வயது பெண் வசித்து வந்தார். இவர் அன்புடன் வளர்த்து வந்த நாயின் பெயர் ஸ்கூபி டூ கார்ட்டூன் படங்களில் முக்கிய கதாபாத்திரமாக வரும் ஸ்கூபி டூ என்ற பெயரையே தனது வளர்ப்பு நாய்க்கும் அவர் வைத்திருந்தார்.

இந்நிலையில் அடுக்குமாடி குடியிருப்பில் அந்த பெண் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதை தற்கொலை வழக்காக பொலிசார் பதிவு செய்ய முடிவு செய்த போது அந்த பெண்ணின் குடும்பத்தார் இதை கொலை என்று புகார் செய்தனர்.


இதையடுத்து இந்த வழக்கை எப்படி விசாரிப்பது என்று முடிவு செய்வதற்காக ஸ்கூபி டூ நாயை சாட்சியமாக சேர்த்தனர். சாட்சிக் கூண்டில் நாய் ஏற்றப்பட்டது.

சந்தேகத்துக்கு இடமானவர்கள் ஒவ்வொருவராக கூண்டில் ஏற்றப்பட்டனர். எஜமானியை கொன்றவர் கூண்டில் ஏறிய போது அவரைப் பார்த்து ஆக்ரோஷ மாக அந்த நாய் குரைத்தது இதையடுத்து இவ் வழக்கை கொலை வழக்காக பொலிசார் பதிவு செய்தனர் நீதிபதி தாமஸ் கசுட்டோ நாயின் தனித்திறனையும் விசாரணையில் அதன் மதிப்பு மிக்க பங்கையும் பெரிதும் பாராட்டினார். (அ-6)

## சமையலுக்கு உடைத்த சிப்பியில் 26 முத்துக்கள்

(டீர்)

லெபனானின் ஒருஉணவு விடுதியில் சமைப்பதற்க்காக உடைக்கப்பட்ட சிப்பிக்குள் 26 முத்துக்கள் கிடைத்தன. லெபனானின் பெரும்பாலும் உணவு சிப்பிக்கள் சாப்பிடப்படு வது இல்லை. ஆனால் தெற்கு லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஐ.நா அமைதிப் படையில் உள்ள பிரான்ஸ் மற்றும் இத்தாலி நாட்டு வீரர்கள் இவற்றை விரும்பி உண்பது வழக்கம் டீர் நகரின் தெற்கு துறை



முகப் பகுதியில் உள்ள ஒரு உணவு விடுதியில் சிப்பி உணவுகள் தயாரித்து பரிமாறப்பட்டு வந்தன. இந்த விடுதியின் உரிமையாளரின் 50வயது தாய், அமல் சல்ஹா என்பவர் மகனுக்கு உதவியாக சமையல் அறையில் வேலை பார்த்து வந்தார் உணவு சிப்பிகள் ஒரு கிலோ400ரூபாய்க்கு விற்கப்படுகின்றன சமையலில் ஈடுபட்டு இருந்த போது ஒரு சிப்பியை உடைத்தார்.

அதில் திராட்சைக் கொத்து போல பல் வேறு வடிவங்களில் முத்து க்கள் இருந்தன அதை எண்ணிப் பார்த்த போது26 முத்துக்கள் ஒரே சிப்பியில் இருப் பது தெரிய வந்தது. சிப்பிக்குள் தகதகவென ஒளியுடன் முத் துக்களை பார்த்த அமல் சல்ஹா, வியப்பில் கூச்சல் எழுப்பி விட்டார் ஒரு சிப்பியில் ஓரி ரண்டு முத்துக்கள் இருப் பதில் வியப்பில்லை ஆனால் ஒரே சிப்பியில் 26 முத்துக்கள் இருப்பது மிகமிக அபூர்வம். இதை கின்னஸ் விருதுக்காக விண்ணப்பித்துள்ளார் அமல் சல்ஹா. (அ-6)

## தினமும் மீன், மாமிசம்,பால் சாப்பிட்டால் முதுமையிலும் நினைவுத்திறன் பாதிக்கப்படாது

### ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வில் தெரிவிப்பு

(லண்டன்)

மீன்,மாமிசம் , பால் போன்றவற்றை தினமும் சாப்பிட்டால் வயதான காலத்தில் நினைவுத் திறன் பாதிக்கப்படாது என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பாக கூறியுள்ளதாவது, இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் அதிக அளவில் உருவாகவும் நரம்பு மண்டலங்கள் சீராக செயல்படவும் நினைவுத் திறன் பாதிக்கப்படாமல் மூளை நன்றாக செயல்படவும் விற்றமின் பி-12 அவசியம். அதற்கு தினமும், மீன், மாமிசம் மற்றும் பால் போன்றவற்றை சாப்பிட வேண்டும். இரத்தத்தில் இந்த வகை விற்றமின் குறைவாக உள்ளவர்களுக்கு மூளையின் செயற்பாடு குறைவாக இருப்பதாகவும் விற்றமின் சத்து அதிக அளவில் உள்ளவர்களுக்கு மூளையின் செயற்பாடு நன்றாக இருப்பதும் கண்டறியப்பட்டது .

61 முதல் 87 வயது வரையுள்ள 107 பேரிடம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விபரம் தெரிய வந்துள்ளது. இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். (அ-6)

## உலகில் முதன் முறையாக அவுஸ்திரேலியாவில் மனித உரிமை விதிகளுக்குட்பட்ட சிறை திறப்பு

(மெல்போர்ன்)

உலகில் முதன் முறையாக மனித உரிமை அமைப்பின் விதி முறைக்கு உட்பட்டு அமை க்கப்பட்டுள்ள சிறை அவுஸ்திரேலியாவில் திறக்கப்பட்டுள்ளது.

சிறைக ளில் குறுகிய இடத் திற்குள் அதிக கைதிகள் அடைத்து வைக்கப்படுவதாகவும் போதிய சுகாதாரக் கேடுகள் நிலவுவதாகவும் மனித உரிமை அமைப்புகள் நீண்ட நாட்களாக குற்றம் சாட்டி வருகின்றன. போதிய காற்றோட்டம் இல்லாத அறைகளில் ஏராமான கைதிகள் அடைத்து வைக்கப்படுவது மனித உரிமை மீறல் எனவும் அந்த அமை ப்புகள் வலியுறுத்தி வந்தன. அவுஸ்திரேலியாவின் கான்பெராவில் முதல் முறையாக மனித உரிமை அமைப்பின் விதிமுறைகளுக்குட்பட்ட நவீன சிறையை அவுஸ்திரேலியா அமைத்துள்ளது இந்த சிறை சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது இந்த சிறையில் வழக்கமான சிறைகளில் உள்ளது போன்ற கம்பிகள் போட்ட கதவுகள் இல்லை வீட்டில் இருப்பது போன்று கைதிகள் சுதந்திரமாக இருக்கலாம் சிறை வளாகத்தை சுற்றி மின்சார வேலிகள் எதுவும் அமைக்கப்படவில்லை கைதிகள் தங்கள் அறைகளை விட்டு வெளியேறி சிறை வளாகத்தில் உலவுவதற்கு வசதியாக ஒவ்வொருவருக்கும் "ஸ்வீப் காட்" வழங்கப்பட்டுள்ளன. இதை கைதிகள் பயன்படுத்தலாம். மேலும் குறைந்த அளவு தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்காக "காட்டேஜ்" முறையில் வடிவமைக்கப்பட்ட கட்டங்கள் கட்டப்பட்டுள்ளன. மற்ற கைதிகளுக்கு அறைகள் கட்டப்பட்டுள்ளன. இது குறித்து அவுஸ்திரேலிய அதிகாரிகள் கூறுகையில் சிறை என்பது குற்றம் செய்பவர்களை திருத்துவதற்கானது அவர்களைமேலும் குற்றம் செய்ய தூண்டும் வகையில் சிறை இருக் கக்கூடாது இதை உணர்ந்து தான் மனித நேய அடிப்படையில் இந்த சிறை கட்டப்பட்டுள்ளது என்றனர். (அ-6)

# உணவே மருந்து -இஞ்சி

நோயற்ற வாழ்விற்கு உணவு சீர் திருத்தமே சிறந்த வழி. இன்று உலகமய மாக்கல் கொள்கையால் பல கவர்ச்சிகர மான வெளிநாட்டு உணவகங்கள் நம் நாட்டில் தேர்ன்ற ஆரம்பித்துள்ளது. துரித உணவகங்கள் அதிகரித்துள்ளன. சென்ற தலைமுறையில் இல்லாத வாழ்வியல் நோய்கள் நம்மிடம் அதிகரித்திருப்பதற்கு காரணம் தவறான உணவுப் பழக்கங்கள் தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

நோயைத் தவிர்ப்பது என்பதே நம் நோக்கமாக இருக்கவேண்டும்.நம் நாட்டு பாரம்பரிய மருத்துவ முறை முதல், மேற்கத்திய மருத்துவ மேதை ஹிப்போக் கிரட்டிஸ் வரை உணவே மருந்து, மருந் தே உணவு என்ற உயர்ந்த கொள்கையை வலியுறுத்தி உள்ளனர்.

மனிதன் உயிர் வாழ தேவையான மிக முக்கியமான ஒன்று உணவு. தொழில் புரிவதற்கு சக்தியைக் கொடுக்கவும், உடலை நிலைபெறச் செய்யவும் உணவு மிக அவசியம். திருவள்ளுவர் உணவைப் பற்றி ஓர் அதிகாரத்தையே இயற்றி உள் ளார். உணவில் ஏற்படும் குற்றங்கள்தான் நோய் தோன்றுவதற்கான மிக முக்கிய காரணம், உணவு வல்லுநர்கள் மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து என உணவை உயிர் வேதியியல் தொகுதியாக பார்க் கிறார்கள். தினசரி உணவில் ஒவ்வொரு பொருளிலும் கொஞ்சம், கொஞ்சமாக



சேர்த்து சரிவிகித உணவு என்ற கொள்கை யைப் பரிந்துரைக்கிறார்கள். நம் நாட்டு பாரம்பரிய மருத்துவ முறை உணவு என்பது நமது மனித உடலுக்கு தேவையான சக்தி யை தரும் பொருள் என்ற கண்ணோட்டத் துடன் பார்க்கிறது. நோய் தீர்க்கும் குணத்தை அளிக்கக் கூடிய உணவை தேர்ந்தெடுத்து சாப்பிடும் பொழுது நம் உணவே நமக்கு மருந்தாகிறது. உணவே நம் நோய்க்கு சிகிச்சை ஆகிறது.

சென்ற தலைமுறையில பெண்கள் எல்லா வகையான சுவைகளுக்கும் முக்கி யத்துவம் கொடுத்தே அகத்திக்கீரை, பாகற்காய், சுண்டைக்காய், வேப்பம்பூ, வேப்பம் கொழுந்து மற்றும் பல மருத்துவ குணம் வாய்ந்த கீரை, காய் கனிகள், பூக் களை உணவில் சேர்த்து வந்தனர். உணவே மருந்து என்ற கொள்கையை எல்லாப் பெண்களும் கடைப்பிடித்து வந்தனர். வீட்டில் உள்ளவர்களின் உடல் தன்மை யையும், அவர்களின் உடல் உபாதைக ளையும் பொறுத்தே, அவர்களின் சமைக் கும் முறை அமைந்திரு ந்தது.

அகத்திக்கீரை மற்றும் அதன் பூ வயிற்றுப் புண்களுக்கு சிறந்த மருந்து. உடல்வலி தோன்றினால் கண்டத் திப்பிலி ரசம், மூட்டு வலிகளுக்கு முடக்கத்தான் கீரை ரசம், சளி இருமல் தோன்றினால் தூதுவளை, மொசு மொசுத்தை கீரை மூலநோய் கண்டால் கருணைக் கிழங்கு என உணவை மருந் தாக்கினார்கள். பெண்கள் பல உணவு மருந்துகளை தெரிந்து வைத்திருந்தனர். நோயை வரும் முன் காத்தனர்.

இன்று உணவு பதப்படுத்தப்பட்டு நம் நாட்டுதட்ப வெட்ப நிலைக்கு சம்பந்தப்படாத பொறித்த உணவுகளை அதிகம் சாப்பிடு வதால் பலர் ஜீரண கோளாறுக ளால் துன்பப் படுகின்றார்க்ள. உடற்பருமன் மிகஇயல்பான ஒன்றாகிவிட்டது. நீரிழிவு நோய் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இளைஞர்களிடையே உயர் இரத்த அழுத் தம் இயல்பான ஒன்றாகிவிட்டது. நம் உடல் நலத்திற்கு பொருந்துமாறு தேர்ந் தெடுக்கப்பட்ட முழு ஊட்டச்சத்து உணவுப் பொருட்களை திட்டமிட்ட முறையில் அள வாக உட்கொள்ள வேண்டும். மருந்துக ளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை உணவிற்கு அளித்த சரியான சீரான அளவு களில் உண்ணவேண்டும். இதைத் தான் உணவே மருந்து, மருந்தே உணவு என்ற உணவு சிகிச்சை.




## மகத்துவம்

- இஞ்சியில் தோலில் நச்சுத் தன்மை யிருப்பதால் தோலை நீக்கிவிட்டுத் தான் பயன்படுத்த வேண்டும்.காலை நேரத்தில் பயன்படுத்துவதே மிக நல்லது
- இஞ்சியை ஒரு தேக்கரண்டி அள விற்கு துருவி எடுத்து அதில் சிறிதளவு கல் உப்பு கலந்து உணவு சாப்பிடுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு நன்றாக மென்று சாப்பிட்டால் நன்றாக பசியெடுக் கும்.
- சளி, இருமல், சைனஸ், மூக்கடைப்பு இருப்பவர்கள் தேநீர், காபி பருகாமல் அதற்கு பதிலாக 2தேக்கரண்டி இஞ்சிச் சாறு, ஒரு கப் சுடுநீர், சிறிதளவு தேன் ஆகியவைகளைக் கலந்து பருகவேண் டும். உடல்வலி, மூட்டுவலி, வாதவலி போன்றவைகளுக்கும் இஞ்சி சாறு சிறந்தது.
- நல்ல தேனில் இஞ்சியை நறுக்கிப் போட்டு தினமும் ஒரு தேக்கரண்டி சாப் பிட வேண்டும். ஒரு தடவை தயாரித் ததை பத்து நாட்களுக்கு மேல் பயன்படுத் தக்கூடாது.

## 100 கிராமில் இருக்கும் சத்துக்கள்

நீர் சத்து –80.9கிராம்.
புரதம் –2.3கிராம்
கொழுப்பு–0.9கிராம்
தாதுஉப்புக்கள்–1.2 கிராம்
நார்ப்பொருள் –2.4 கிராம்
மாச்சத்து–12.3 கிராம்
100 கிராம் இஞ்சியில் 67 கலோரி இருக்கிறது.

கல்சியம்–20மிகிராம்,பொஸ்பரஸ்–60 மி.கிராம், இரும்புச் சத்து –2.7 மி. கிராம் அளவில் இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் கப காலம், பித்தகாலம், வாத காலம் என்று மூன் றாகப் பிரிக்கப்படுகிறது. கப காமம் காலை 6 மணிக்கு தொடங்குகிறது. அதற்கு முன்பே படுக்கையில் இருநது எழுந்தால் உடலிலில் சோர்வு ஏற்படாது. காலை உணவில் இஞ்சி சேர்த்தால், இஞ்சியில் இருக்கும் சத்துக்கள் உடலை ஜீரணத் துக்கு தயார் .

மதிய உணவில் வேர்க் கொம்பு சேர்த்தால் நன்றாக ஜீரணிக்கச் செய்யம். இரவு உணவில் கடுக்காய் சேர்த்தால் உடலுககு தேவை யான சத்துக்களை தருவதோடு, மல ச்சிக்கலையும் இல்லா மல் செய்திடும்.

## இஞ்சி ஜாம்



1.இஞ்சி–250கிராம்
2.பேரீச்சம்பழ விதை நீக்கியது– 250கிராம்
சீனி அல்லது வெல்லம்–250கிராம்
4.நெய்–100கிராம்
5.தேன்–100 கிராம்
6.ஏலக்காய்–25 கிராம்(பொடித்து கொள்ளவும்)

*செய்முறை*

1.நல்ல திடமான இஞ்சியை தோல் சீவி நன்கு வேகவைத்து, பின் நன்கு மைபோல் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

2.பேரீச்சம் பழத்தை சிறிது நெய் விட்டு வதக்கி இதையும் நன்றாக அரைத் துக்கொள்ளவும்.

3.ஒரு அடிகனமான பாத்திரத்தில் சீனியை இட்டு நன்கு இளகிய பின் அரைத்து வைத்துள்ள இஞ்சி மற்றும் பேரீச்சம்பழத்தை இட்டு நன்கு கிளற வும்,ஏலக்காய் இட்டு சிறிது, சிறிதாக நெய்விட்டு கிளறி இறுதியில் சிறு தீயில் வைத்து தேன்விட்டு வறண்டு வரும்வரை கிளறி ஆறவைத்து கண்ணாடிப் பாத்திரத் தில் பத்திரப்படுத்தவும்.

இந்த ஜாமை பாணில் பூசி சாப்பிட லாம். காலை,மாலை ஒரு ஸ்பூன் சுவைத்து சாப்பிட்டு பால்குடித்து வர லாம்.வயிற்றுக் கோளாறுகள்,மார்பு வலி, ருசியின்மை, பசியின்மை, மலச் சிக்கல்,வயிற்று உப்புசம்,வாய் நீருரல் ஆகிய பிரச்சினைகள் தீரும். பேரீச்சம் பழம் சேர்த்துள்ளதால் இரதத்தத்தில் இரும்புச் சத்து அதிகரிக்கும்.

# பல்முளைக்கும் போது...




நாமெல்லாம் பல்வலி, பற்சிதைவு வந்தால் தான் பல் டாக்டரிடம் போய் சிகிச்சை பெறும் பழக்கத்தை கொண்டுள் ளோம். ஆனால்அது தவறு என்று கூறுகின் றனர் மருத்துவ ஆய்வாளர்கள். குழந்தைப் பருவத்திலேயே... அதாவது பல் முளைக் கும் போதே பல் டாக்டரிடம் காண்பித்து ஆலோசனை பெற்றால் பற்கள் அழகாக வளரும் என்றும் கூறுகின்றனர்

குழந்தைகளக்கு பாற் பற்கள் முளை க்க ஆரம்பித்த 6 மோதத்தில் பல் டாக்கரிடம் காண்பிக்கவேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி வளரக்கூடிய பாற் பற்கள் தான் பின்னால் வளரக் கூடிய அனைத்துப் பற்களுக்கும் அடிப்படை ஆதாரம் !

இந்த பற்கள் எல்லாம் நெருக்கமாக வளர்ந்திருந்தால் பின்னால் முளைக்கும் பற்கள் வரிசைப்படி வளராது! குழந்தைகள் பால் குடிக்கும் போது அந்தப் பால் வாயில் தேங்கினால் அது பற்களையும் பாதிக்கும். தாய்பால் குடிக்கும் போதுகுழந்தைகளை கைகளால் உயர்த்திப் பிடிப்பது நல்லது.


பால்குடித்தபின்பு குழந்தைகளுக்கு சூடு படுத்தி ஆறிய நீரை இரண்டு தடவை குடிக்க கொடுக்கவும். இப்படி செய்தால் பற்களில் பாதிப்பு இருக்காது. குழந்தைக ளுக்கு அதிகமாக புட்டிப் பால் கொடுப்ப தால் பற்களின் வரிசை சரியாக அமை யாது.

குழந்தைகளுக்கு முளைக்கும் பாற் பற்கள் சீக்கிரமாக விழக்கூடாது. அப்படி விழுந்து , அடுத்து முளைக்கும் பற்கள் முன்னோக்கி வளரும். தற்போது இப்படி முன்னோக்கி வளரும் பற்களை சரிப்படுத்த் நவீன சிகிச்சைகள் வந்த விட்டன

விரல்சூப்புதல், வாய் திறந்தபடி தூங் குதல் , நாக்கை அடிக்கடி வெளியே தள் ளுதல் போன்ற பழக்கங்களும் பற்களைப் பாதிக்கும். விரல் சூப்புவதால் மேல்வரி சைப் பற்கள் வெளியேயும், கீழ் வரிசைப் பற்கள் உள்ளேயும் தள்ளிக் கொண்டே வளரும். 4 வயது வரை விரல் சூப்பலாம். அதன் பின்னர் விரல் சூப்புவது நல்லதல்ல. டாக்டரிடம் சிகிச்சைபெறுவது அவசியம்.

தூங்கும் போது வாய் திறந்தால் பற்கள் வெளிநோக்கி வளரும். இதற்கும் தற்போது நவீன சிகிச்சைகள் வந்துவிட்டன. குழந்தை களுக்கு பெற்றோர் எப்போதும் பல் தேய்த்துவிடக் கூடாது. அவர்களாகவே நன்றாக பல் தேய்க்க கற்றுகொடுத்தல் போதும்.3வயது வரை எப்படி பல் தேய்ப் பது நல்லது என்பதை கற்று கொடுக்கலாம். காலை, இரவு என இரண்டு தடவைபல் தேய்க்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும். குழந்தைகளுக்கு பல் தேய்ப்பதில் ஆர்வ மில்லாமல் இருந்தால் டிசைன்கள், நிறங்களில் பல் தேய்க்கும் பிரஷ்களை வாங்கிக் கொடுத்தால் ஆர்வமாக பல் தேய்ப்பார்கள்.

# ஒஸ்டியோபொரோசிசைத் தடுக்கும் அன்னாசி



வயது முதிர்ந்தவர்கள், பெண்கள் ஆகி யோரை அதிக அளவில் பாதிக்கும் எலும்பு நோயான ஒஸ்டியோபொரோசிசைத் தடுக்க அன்னாசிப் பழம் சிறந்த உணவு என மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அன்னாசிப்பழத்தில் மாங்கனீஸ் சத்துஅதிகம் உள்ளது.மங்கனீஸ் சத்து எலும்பு பாதிப்பைத் தடுக்கும் முக்கிய உலோகச்சத்தாகும்.நம் உடலுக்கு நாள்தோறும் தேவையான மங்கனீசில் 73 சதவீதம் ஒரு கப் அன்னாசிப் பழம் தருகிறது. வளர் பருவத்தினரின் எலும்பு வளர்ச்சிக்கும் முதுமைப் பருவத்தினரின் எலும்பு பாது காப்பிற்கும் அன்னாசிப்பழம் சிறந்தது என இந்த ஆய்வு முடிவுகளில் கூறப்பட்டுள்ளது. அன்னாசிப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வர புகை பிடிக்கும் பழக்கத்தின் மீதான மோகம் குறையும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

# பெண்களின் இதய நோயை தவிர்க்கும் உடற்பயிற்சி



தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வரும் பெண்களுக்கு இதயநோய் வரும் வாய்ப் புகள் குறைவு. பொதுவாக 40 வயதிற்கு மேல் பெரும் பாலானபெண் க ளுக்கு மாதவிலக்கு நின்றுவிடும். மாத விலக்கு நின்ற பிறகு அதிகமான மன அழுத்தத்திற்கு உள்ளாகும் பெண்களுக்கு இதய நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எனவே மாதவிலக்கு நின்ற வுடன் உடல் ஆரோக்கியத்தை காக்க பெண்கள் தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டியது அவசியம்.

உடற் பயிற்சியில் ஈடுபடுவதால் பெண்களுக்கு மனஅழுத்தம் ஏற்படாது. மன அழுத்தம் உண்டாக்கும் சூழலினும் பெண்கள் சிறப்பாக செயல் படுவதற்கு உடற் பயிற்சி மிகவும் உதவி யாக இருக் கும். ஈனவே மாவிலக்கு நின்ற பிறகு பெண்கள் தொடர்ந்து உடற் பயிற்சி செய் தால் நீண்ட காலம் வாழலாம்.

# தேர்தல் முறைமையை மறுசீரமைத்ததன் பின்னரே யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத்தேர்தல்?

## வரவு- செலவு திட்டத்திற்கு பின்னர் வேட்பு மனு கோரும் சாத்தியம்!

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான உள்ளூராட்சி சபைத்தேர்தலைஇவ்வருடத்திற்குள் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நம்பகரமாக தெரிய வருகின்றது. தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொண்டு முறைமையை மறுசீரமைத்ததன் பின்னரே அங்கு உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் மாநகர சபைக்கான தேர்தலையே இவ்வருடத்திற்குள் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் வடக்கு மாகாணத்திற்கான ஆளுநர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொண்டு அந்த முறைமையை மறுசீரமைப்பதற்கான சட்ட மூலங்கள் இரண்டு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருக்கின்றன. அவ்விரு சட்டமூலங்களுக்கும் சபையில் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னரே எதிர்காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் உள்ளூராட்சி தேர்தல் முறையில் திருத்தங்களை மேற்கொள்ள விருப்பதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் உயர் மட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையாடல்களை மேற் கொண்டதுடன் உயர் நீதிமன்றத்திடமிருந்து சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள விருக்கின்றது.

சட்ட ஆலோசனைகள் கிடைத்ததன் பின்னர் உள்ளூராட்சி சபைத்தேர்தல் முறைமையில் திருத்தங்களை ஏற்படுத்தி பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளவிருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் திருத்தங்கள் இரண்டு மாதங்களுக்குள் சபையில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பழைய முறைப்படி தொகுதி வாரியாக நடத்துதல், பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கு புதிய சட்ட திட்டங்களை அறிமுகப்படுத்தல் ஆகிய இரண்டு பிரதான திருத்தங்களை உள்ளடக்கியே தேர்தல் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப் படவிருக்கின்றன.

இந்த திருத்தங்கள் மூலமாக உள்ளூராட்சி சபைகளில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பிரதான கட்சிகள் உள்ளிட்ட 60கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் 27 கட்சிகளே தேர்தல் சட்ட திட்டங்களின் பிரகாரம் செயற்படுவதாக சுட்டிக் காட்டிய பாராளுமன்ற தெரிவுக்குழு பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள் வருடாந்தம் மாநாடுகளை நடத்தி உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டும், தேர்தல்களில் போட்டியிட வேண்டும் என்ற சரத்துக்கள் உள்ளடக்கப்படவிருப்பதாக தெரி விக்கப்படுகின்றது.

தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பத்திரம் விரைவில் அமைச்சரவையில் தாக்கல்செய்யப்பட்டு அமைச்சரவையின் அனுமதியுடன் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு கட்சிகளின் ஆலோசனைகளுடன் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட விருக்கின்றது.

தேர்தல் முறைமைக்கு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னரே யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்படும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப் பிக்கப்பட்டதன் பின்னரே வேட்பு மனுவை- கோருவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் அந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (அ-6)

## தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுக்க பாடசாலை மாணவர் கேடயங்கள் அல்ல

### ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தொழிற்சங்கங்கள் தங்களது உரிமைகளை வென் றெடுப்பதற்காக பாடசாலை மாணவர்களைக் கேடயங்களாகப் பயன் படுத்தக் கூடாது.

இதனால் எமது எதிர்கால சந்ததியினர் பெரிதும் பாதிக் கப்படுவர். இதற்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதே மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றஊழியர் சேமலாப நிதியத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

பயங்கரவாதம் ஒழித்துக்கட்டப்பட்டு நாட்டில் அமைதியான சூழல் உருவாக்கப்படு ம் இதனூடாக அச்சம் பீதியின்றி சகலரும் நாட்டின் எந்தப் பகுதி யிலும் சுதந்திரமாகத் தொழில் புரிய வாய்ப் புக்கள் உருவாகும்.

இவ்வாறான சூழலை உருவாக்குவதற்கு சகலரும் ஒத் துழைப்பு நல்குவது அவசியம்.

ஊழியர் சேமலாப நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவடையும் இச் சந்தர்ப்பத்தில் அதனை அமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியிலிருப்பது பெரும் அதிர்ஷ்டமாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

## தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் இருந்து புலிகளே அதிகபயனைப் பெற்றுள்ளனர்

### புலனாய்வுத்துறை தெரிவிப்பு-சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

வன்னியில் இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பெறுமதி வாய்ந்த பல சொத்துக்களை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தாரைவார்த்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 20 வாகனங்கள், செய்மதித் தொழில் நுட்ப தொடர்பாடல் உபகரணங்கள், வலி தடுப்பு மாத்திரைகள் உள்ளிட்ட பல பொருட்கள் விடுதலைப்புலிகளுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன் படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர் அங்கு தன்னார்வ பணிகளில் ஈடுபட்ட தொண்டு நிறுவனங்களிட மிருந்து பொது மக்களைவிட புலிகளே அதிக பயனைப் பெற்றுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது. மல்லாவி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள வில்லை என பாதுகாப்பு தரப்பு வட்டாரத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

வன்னி அபிவிருத்திப் பணிகள் என தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எதனையும் செய்யவில்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் வாகன சாரதிகளாக பணியாற்றிய பலர் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

## புலிகளின் தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது- ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை அரசாங்கத்தினால் முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை என்பது மொனராகலை எத்திமலைப்பகுதியில் இடம்பெற்ற மனிதபடுகொலைகள் மூலமாக நிரூபணமாகியுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வில்லை என்றும் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

மக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததாகும் என்பதனால் பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடராமல் இருப்பதற்கு ஆக்கபூர்வமான, திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மொனராகலை, கொட்டியாகல, எத்திமலைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் மொனரா கல மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மொனராகலை கொட்டியாகல பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மனித படுகொலைகள் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது என்று நிரூபணமாகியுள்ளது. எனினும் அரசாங்கம் வழமைபோலவே புலிகள் அமைப்பின் மீது குற்றஞ் சாட்டி சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக கண்டன அறிக்கை விடுத்து தப்பித்துக்கொள்வதற்கு முயற்சிக் கின்றது.

மக்கள் முகம் கொடுக்கின்ற பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடர்பாகவோ, தாக்குதல் சம்ப வங்களை முழுமையாக தடுத்து நிறுத்துவது தொடர்பிலோ திட்டமிட்ட நடவடிக்கை களை முன்னெடுப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளமை கண்டிக்கத்தக்கதாகும்.

கதிர்காமம் பிரதேசத்தில் புலிகள் மனித படுகொலைகள் பலவற்றை செய்துள்ளனர். பாதுகாப்பு முகாம்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இந்த பாதுகாப்பற்ற நிலை இன்று நேற்றல்ல வருடக்கணக்கில் தொடர்கின்றது. எனினும் அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு அரசாங்கம் முழுமையாகவே தவறி விட்டது என்பது இந்த சம்பவத்தின் மூலமாக வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மொனராகலை போன்ற மிகவும் பின் தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நாட் கூலிக ளாகவே இருக்கின்றனர். வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக இவ்வாறான துன்பங்களையும் தாங்கிக்கொள்கின்றனர் என்பதனால் அந்த மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்ததாகும் , என்பதுடன் இந்தப் பொறுப்பை முழுமையாக மேற்கொள்ளுமாறு நாம் அரசாங் கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றோம். (அ-6)

## காணாமல் போனவர்களின் சடலங்கள் மத்துகம பிரதேசத்தில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மத்துகம பதுரெலிய பிரதேசத்தில் இருந்து இரண்டு சடலங்கள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஆரம்ப விசாரணைகள் மூலம் மீட்கப் பட்ட சடலங்கள் அந்தப் பிரதேசத்தில் இருந்து காணாமல் போனவர்களுடையது எனத் தெரிய வந்துள்ளது.

இதே வேளை ராகமை, பட்டுவத்தை புகையிரதக் கடவையில்இடம் பெற்ற விபத் தொன்றில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டி ஒன்று புகையிரத த்துடன் மோதியதை அடுத்தே இந்த அனர் த்தம் இடம் பெற்றுள்ளது. (அ-5)

அயலானுடைய கால் ஒடிந்த பிறகுதான் மிக நன்றாக நடக்கலாம் என்று பொறாமைக்காரன் நினைக்கின்றான்.

~ டென்மார்க்

வலம்புரி

## கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படும் சூழ்ச்சி

கொழும்பில் காரணமின்றி தங்கியிருப்பவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தேவையில்லாமல் கொழும்பில் தங்கியிருப்பதென்பது பொருத்துடைய தகவலல்ல. ஏனெனில் நாட்டின் தலைநகரிலேயே அனைத்து அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் தலைமைக் காரியாலயங்களும், வெளிநாட்டுத் தூதரகங்களும், அமைச்சுக்களும் வெளிநாட்டுப் பயணத்திற்காக விசா வழங்கும் அமைப்புகளும் உள்ளன.

அதேநேரம் கொழும்பில் ஒரு கருமத்தை செய்து முடிப்பதென்பது உடனடியாக நடக்கக் கூடிய காரியமுமன்று.

இந்நிலையில் கொழும்பில் தங்கியிருந்து தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. உதாரணமாக வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்பில் தங்கியிருக்கும் ஒருவர் வருடக்கணக்கில் அங்கு இருக்கவேண்டியுள்ளது.

இதற்கு மேலாக அச்சுறுத்தல், பயம் காரணமாக கொழும்பில் தங்கியிருப்பவர்களையும் இங்கு நாம் மறந்துவிடக் கூடாது.

அவர்கள் தாம் கொழும்பில் தங்கியிருப்பதற்கான காரணம் என்ன என்பதை எவ்வாறு கூறுவது?

உயிருக்கு அச்சுறுத்தல், அதனால் கொழும்புக்கு வந்திருக்கின்றோம் எனில் அவர்களை இருகரம் கூப்பி பொலிஸார் வரவேற்பார்களா என்ன?

எனவே பல்வேறு பிரச்சினைகளின் மத்தியிலேயே தமிழ் இளைஞர்கள் கொழும்பில் தங்கியுள்ளனர். இவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கருத்தின்படி கொழும்பில் உள்ள தமிழ் இளைஞர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

கொழும்பில் தங்கியிருந்த தமிழர்களை அதிகாலை வேளை உடுத்த உடையுடன் பஸ்களில் ஏற்றி அவரவர் இடங்களில் இறக்கிவிட்ட பெருமை இலங்கை அரசிற்கு உண்டு.

அந்தப் பெருமையை மீண்டும் ஒரு முறை அமுல்படுத்துவதில் இலங்கை அரசு அதீத கவனம் எடுக்கின்றது என்னும் உண்மை வெளிப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி நாடு பூராகவும் அமைதியை ஏற்படுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும்.

இதைச் செய்யத்தவறும் சந்தர்ப்பத்தில் தமிழர்கள் பெரும் அவலங்களை எதிர்காலத்தில் சந்திக்கும் அபாயமுண்டு என்பது நிறுத்திட்டமான உண்மை.

# மொழி அடிப்படையில் பாகுபாடு தொடர்பில் குறைந்தளவு முறைப்பாடுகளே கிடைக்கின்றன

## அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் நிர்வாக உத்தியோகத்தர்

(கொழும்பு)

மொழியை அடிப்படையாகக் கொண்டு அரச அலு வலகங்களில் பாகுபாடு காட்டப்படுவது தொடர்பில் தமிழ் பேசும் சமூகத்திடமிருந்து குறைந்தளவு முறைப்பாடுகளே அரச கரு மொழிகள் ஆணைக்குழுவிற்குக்கிடைப்பதாக ஆணைக்குழுவின் மும்மொழிக்குமான நிர்வாக உத்தியோகத்தர் கே.ஹேமச்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது,

இலங்கை அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சிங்கள மொழியும் தமிழ்மொழியும் இலங்கையின் அரச கரும மொழிகளாகும். மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரஜைஎவருக்கும் பாகுபாடு காட்டப்படுவதுமொழி உரிமை மீறலாகும்.

இருப்பினும் ஒருசில அரச அலுவலகங் களில் இத்தகைய பாகுபாடுகள் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் ஆணைக்குழுவிற்கு முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இருந்த போதிலும் இவ்வாறு மொழி உரிமை மறுக்கப்படுவது தொடர்பில் தமிழ் பேசும் சமூகத்திடமிருந்து ஆணைக் குழுவிற்கு மிகக் குறைந்த முறைப்பாடுகளே கிடைக்கப்பெறுகின்றது. ஏதாவதொரு அரச அலுவலகத்தில் தமிழ் மொழிக்கான உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் அதுதொடர்பில் எழுத்துருவில் முறைப்பாடுகளை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க முடியும். இவ்வாறான முறைப்பாடுகள் இருப்பின் தலைவர், அரச கரும மொழிகள் ஆணைக்குழு பாஷா மத்சிரிய 341/7 கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

இதேவேளை, பல அரச காரியாலயங்களில் கடமை புரியும் சிங்கள மொழி உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் மொழிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையும் உத்தி யோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளதையடுத்து சிங்களமொழி மூல உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு அரச ஊழியர்களுக்கான மொழிப் பரீட்சைகள் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை திணைக்களம் அனுப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

# இரண்டாம் கட்ட இலவசப் பாடநூல்கள் ஒக்டோபர் 15 இல் அனுப்பப்படும்

## கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்துக்கான இரண்டாம் கட்ட இலவச பாடநூல்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி கப்பல் மூலம் அனுப்பப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் குறிப்பிட்டதாவது, யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் இரண்டாம் கட்ட மாக கப்பல் மூலம் அனுப்பப்படவுள்ளன. இதன் போது 2 இலட்சத்து 27 ஆயிரத்து 352 பாடநூல்கள் அனுப்பப்படவுள்ளன.

இலவச பாட நூல்களை யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் அனுப்பும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த தலைமையில் கொழும்புத்துறைமுகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நிர்மல கொத்தலாவல, டிலான் பேரேரா மற்றும் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த முதல் கட்ட நிகழ்வின் போது 6 இலட்சத்து 14ஆயிரத்து 974 இலவச பாட நூல்கள் 4 பாடசாலைகளுக்கும் 14 கோட்டக் கல்வி காரியாலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இதன் பிரகாரம் யாழ்.மத்திய கல்லூரி 7ஆயிரத்து 686 பாட நூல்களும், வேம்படி மகளிர் கல்லூரிக்கு 9 ஆயிரத்து 376 உம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 9ஆயிரம் 605 உம், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு 8ஆயிரத்து 580 பாட நூல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், தொல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை; பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சவகச்சேரி, வேலணைத் தீவுகள் மற்றும் நெடுந்தீவு ஆகிய கோட்டக்கல்வி காரியாலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பாட நூல்கள் அங்கிருந்து பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை 2009ஆம் ஆண்டில் 354 வகையான பாட நூல்களுக்காக 270 கோடி ரூபா செலவிடப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## கிழக்கில் ஒரே இரவில் மூவர் சுட்டுக்கொலை

திருகோணமலை கப்பல் துறையில் சனிக்கிழமை இரவு இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் தமதுவீடுகளில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

25வயதான பாஸ்கரன் மற்றும் 45வயதான இராஜேஸ்வரன் ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர். இதே வேளை மட்டக்களப்பு காத்தான் குடியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் ஹுசைன் என்பவரே கொல்லப்பட்டவராவர். (அ-5)

# தமிழ் மக்களை அழிப்பதற்காகவே அரசாங்கம் தொண்டர் அமைப்புக்களை வெளியேற்றுகிறது

## இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிளிநொச்சியிலிருந்து தன்னார்வ அமைப்புக்களை வெளி யேற்றும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு உலகத் தமிழர்களுடன் இணைந்து ஐ.நா. சபைக்கு வேண்டுகோளொன்றை விடுக்கவுள்ளோம். அரசாங்கம் வடக்கில் தமிழ் மக்களை அழிக்கவே தன்னார்வ தொண்டர் அமைப்புக்களை வெளியேற்றுகின்றது என்று இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமில் ஜயநெத்தி தெரிவித்தார். இது தொடர்பாக சமில் ஜயநெத்தி மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,


தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே யுத்தத்தை நடத்துவதாகத் தெரிவிக்கும் அரசாங்கம் கிளிநொச்சியில் மக்களுக்கு உதவி புரியும் தன்னார்வ அமைப்புக்களை வெளியேற்றி தமிழ் மக்களை அழிக்க முயற்சிக்கின்றது.

கிளிநொச்சியை விரைவில் பிடித்து விடுவோமென மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து தென்பகுதி மக்கள் மனதில் யுத்த மனோபாவத்தை ஏற்படுத்தி தேர்தல்களில் அரசாங்கம் வெற்றி பெற்றது. ஆனால் நிலைமை மாறி விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் ஆக்ரோஷமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இச் சந்தர்ப்பத்தில் மக்களை தம்பக்கம் தக்க வைத்துக் கொள்ளவும் அரசாங்கத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காகதமிழ் மக்களை அழித்தாவது யுத்தத்தில் வெற்றி பெற முனைகிறது. எனவே தான் அதற்கு இடைஞ்சலாகவுள்ள மக்களுக்கு உதவிபுரியும் தன்னார்வ அமைப்புக்கள் உட்பட ஐ.நா. அமைப்புக்களை கிளிநொச்சியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் பணித்துள்ளது. (அ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமை வளர்ச்சியின் விதிமுறைகள்




நுண் பொருளில் இயக்கம் எதையும் காண்பதில்லை. ஒரு வேலை இயக்கம் அவ்வளவு தீவிரமாக இருப்பதால் நாம் அதைக் காண முடியாமல் இருக்கலாம். ஆனால் ஏதேனும் விஞ்ஞானத்தாலோ, ஆராய்ச்சியாலோ வெளியே தெரிகின்ற இந்த இயக்கத்திற்குக் காரணமான நுண்ணிய சக்திகளைக் கைப்பற்ற ஒரு துணை கிடைக்குமானால் புற இயக்கத்தையே கட்டுப்படுத்த முடியும்.

குளத்தின் அடியிலிருந்து நீர்க்குழி கிளம்புகிறது. அது வந்து கொண்டிருக்கும் போதெல்லாம் அதை நாம்காண்பதில்லை ; நீர் மட்டத்திற்கு வந்துவெடிக்கும் போது மட்டுமே பார்க்கிறோம் அது போலவே, எண்ணங்கள் பேரளவிற்கு முதிர்ந்த பிறகே; அதாவது அவை செயல்களான பின்பு மட்டுமே அவற்றை நாம் உணரமுடியும்.

# கை நிறைய ஊதியம் பெற்றுத் தரும் புதிய படிப்புகள் !

புதிய படிப்புகள்; புதிய வாய்ப்புகள் என்ற அடிப்படையில் தொழில்நுட்பமுன்னேற்றத்துக்கு ஏற்ப நாள் தோறும் புதிய புதிய படிப்புக்கள் அறிமுகமாகி வருகின்றன. அதற்கேற்ப வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. அவற்றில் ஒரு சில துறைகளைப் பற்றிப் பார்க்கலாம்




**ஓடியோ கிராபி**

ஒரு சினிமாவில் சிறந்த ஒலி அனுபவம் கிடைக்க ஓடியோ கிராபரே பொறுப்பு. போஸ்ட புரடொக்ஷனோட் மட்டுமே தொடர்புடையது அல்ல ஓடியோ கிராபி. படத்தின் பிரிபுரொடக்ஷனிலேயே அதுதொடங்கி விடுகிறது. சினிமா உலகம் மிகப்பெரியது. நாளுக்கு நாள் வளர்ந்தும் வருகிறது.

இதனால் திறன் வாய்ந்த நிபுணர்களுக்கு படத்தயாரிப்பு, ஓடியோ இன் ஜினியரிங், மல்டிமீடியா புரடோக்ஷன் போன்ற பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

சினிமா ஸ்டுடியோ, ரெககோர் டிங் ஸ்டுடியோ, ''ரிவி'' மற்றும் மல்டி மீடியா சார்ந்த போஸ்ட் புரடொக்ஷன் குழுக்களில் பணியாற்றுகின்றனர். டிஜிட்டல் புரட்சி இன்றைய சினிமா ஒலிப்பதிவு முறையை முற்றிலுமாக மாற்றியமைத்து விட்டது.

சினிமா, மல்டி மீடியா நிறுவனங்களின்



திறன்வாய்ந்த ஓடியோ கிரா பர்களுக்கு எப்போதும் வேலை வாய்ப்புகள் உள்ளன. சத்தம், இசை, வசனம், ஸ்பெஷல் எபக்ட்ஸ் போன்றவற்றை சிறப்பு பிரிவாக தேர்வு செய்தும் படிக்கலாம்.


**நெட்வேர்க் இன்ஜினியரிங்**

கொம்பியூட்ர்களில் தகவல் தொடர்பு நெட்வேர்க்குகளை மேற்பார்வையிட்டு, சீராக பராமரிக்க வேண்டியது நெட்வேர்க் இன் ஜினியர்களின் பொறுப்பு. கொம்பியூட்டர் நெட்வேர்க்குகளே பெரிய நிறுவனங்களின் முதுகெலும்பாக உள்ளது. இந்த கொம்யூட்டர் நெட்வேர்க்கின் அளவு மாறுபடலாம். ஒரு நிறுவனத்திற்குள் இருக்கும் சில கெம்ப்யூட்டர்களிடையே உள்ள நெட்வேர்க்கில் இருந்து வெவ்வேறு ஊர்களில் இருக்கும் பல கொம்பியூட்டர்கள் இடையேயான பெரிய நெட்வேர்க்குகள் வரை இவர்கள் பராமரிக்கின்றனர்.

சிறிய நெட்வேர்க்குகளை பராமரிக்க இன்ஜினியரிங் திறன்கள் போதுமானது. பெரிய நெட்வேர்க்குகளை பராமரிக்கும் பொறியியலாளர்களுக்கு ஹார்ட்வெயார் பொருத்துவது, சொப்ட்வேர் எழுதுவது, டிரபுள் ஷூட்டிங் போன்றவை குறித்தும் தெரிந்திருக்க வேண்டும். கொம்ப்யூட்டர் டெர்மினல்,




நெட்வேர்க் சர்வர், பிரிண்டர் போன்ற நெட்வேர்க் தொடர்பான இதர கொம்பியுட்டர் பணிகளையும்இவர்களே கவனிக்க வேண்டும். ஹார்ட்வெயார்களை பரிந்துரைப்பது, அதற்கு பொருத்தமான சொப்ட்வேர்களை தேர்வு செய்து நெட்வேர்க்குகளை செயற்பட வைப்பது போன்ற பணிகளையும் இவர்களே கவனிக்கின்றனர். பெரிய நெட்வேர்க்குகளை கையாளும் பொறியியலாளர்களுக்கு டொக்குமென்டேஷன் திறனும் அவசியம். டெஸ்க்டொப் கொம்யியூட்டர்கள்



முதல் மெயின்பிரேம்கள், ரூட்டர், ஸ்விட்ச் போன்றவற்றையும் கையாள தெரிந்திருக்க வேண்டும்.

கொம்ப்யூட்டர் எண்ணிக்கை அதிகரிப்பதால், நெட்வேர்க்குகளும் அதிகரித்து வருகிறன. இதனால், எந்த ஒரு நிறுவனத்திற்கும் நெட்வேர்க் பொறியியலாளர்களின் தேவை உள்ளது.


நெட்வேர்க் டெக்னீஷயன், நெட்வேர்க் சேர்வீஸ் அட்மினிஸ்ரேட்டர், நெட்வேர்க் கொன்ட்ரோல் அனலிஸ்ட் போன்ற பொறுப்புகளில் இவர்களால் பணியாற்ற முடியும். இதில் அனுபவம் உள்ளவர்கள் சூப்பர்வைசர், முகமையாளர் போன்ற பதவிகளை பெறலாம்.

**ஆர்.யூ.பாலமுருகன்**

# பைல்களை எளிதாக கையாள உதவும் ப்ரீ கொமாண்டர்

மிகச் சிறிய அளவில் பைல்களை பயனுள்ள வகையில் கையாள நமக்கு கிடைக்கும் புரோகிராம் ப்ரீ கெமாண்டர். நாம் பைல்களை பிரதி (Copy) செய்யவும் இன்னொரு இடத்திற்கு நகர்த்திடவும் விண்டோஸ் எக்ஸ்புளோரரையயே நாடுகிறோம். இது பைல்களைக் கையாள ஒருவிண்டோ மட்டுமே காட்டுகிறது.

ஒரு டிரைவிலிருந்து இன்னொரு




டிரைவில் உள்ள போல்டருக்கு பைல்களை இழுத்துப்போட வேண்டும் என்றால் இன்னொரு முறை விண்டோஸ் எக்ஸ்புளோரரை இயக்கி விண்டோ ஒன்றை கூடுதலாக திறக்க வேண்டும்.


இந்தபிரச்சினையை ப்ரீ கொமாண்டர் தீர்த்து வைக்கிறது. அருகருகே இரண்டு விண்டோக்களை திறந்து வைத்து பைல் களைக்காட்டுகிறது.

இதனால் பைல் பரிமாற்றத்தினை மிக எளிதாக மேற்கொள்ளலாம். இந்த புரோகிராமில் இன்னொரு பயனும் உண்டு. இதனை

**ஒளி உலகம்**

உங்கள் பிளாஷ் டிரைவில் இன்ஸ்டோல் செய்து கொள்ளலாம்.

அதன் பின்னர் பிளாஷ் டிரைவினை இன்னொரு கொம்பியூட்டரில் பயன்படுத்துகையில் இந்த




புரோகிரா மின் பைல்களை முன்பு கூறியது போல் எளி தாக கையாளலாம். ப்ரீ கமாண்டர் புரோகிரா மினை (http: www.freecommander. com/fe- downl- en.htm) என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாக டவுண்லோட் செய்துகொள்ளலாம்.

# ஓட்டோ ரிப்ளை உருவாக்குவது எப்படி?


உங்களுடைய கொம்பியூட்டர் மற்றும் இணையத்தள இணைப்பை விட்டுவிட்டு பல நாட்களுக்கு வேறு வேலையாக வெளியூர் செல்ல நீங்கள் திட்டமிடும் போது உங்களுக்கு வரும் இ-மெயில் கடிதங்களுக்கு பதில் அனுப்ப என்ன செய்வது ? என்ற கேள்வி எழும். மெயில் அனுப்பியவர்கள் தங்களுக்கு பதில் ஏன் இன்னும் வர



வில்லை என்று ஏமாந்து போவார்களே? அவர்களுக்கு உங்கள் கொம்ப்யூட்டரே ஒரு பதில் கடிதத்தை அனுப்பினால் நன்றாக இருக்குமே என்று எண்ணத் தோன்றும். அதற்கு வழி இருக்கிறது. உங்களுடைய பயணத்திட்டம் குறித்தும் எத்தனை நாட்களில் திரும்பி வருவீர்கள்? இந்த எண்ணுக்கு போன் பண்ணவும் அல்லது வேறு ஒரு முகவரிக்கு (நண்பரின் அல்லது தம்பியின்) மெயில்அனுப்பவும் என்று ஒருபொதுவான செய்தியை அனுப்பினால் எப்படி இருக்கும்.

அவுட்லுக் எக்ஸ்பிரஸ் தொகுப்பில் இந்த மெயிலை உருவாக்குவது குறித்து இங்கு காணலாம். முதலில்புதிய மெயில் ஒன்றை வழக்கம் போல் உருவாக்குவதுபோல் Create mail என்பதில் கிளிக் செய்திடவும். பின்னர் என்ன டெக்ஸ்ட் உங்கள் ஓட்டோ மெடிக் பதில் மெயிலாக போக வேண்டும் என எண்ணுகிறீர்களோ அதனை ரைப் செய்திடவும் அதன் பின் இந்த மெயிலை சேவ் செய்திட File, Save As யை அழுத்தவும். இந்த பதில் மெயிலுக்கு ஒருபெயர் கொடுத்துசேவ் செய்திடவும். இதனை டெக்ஸ் (filename.txt) பைலாக சேவ் செய்திட வேண்டும்.

எங்கு சேவ் செய்திட வேண்டும் எங்கு சேவ் செய்து வைக்கிறீர்கள் என்பதனை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளவும். இப்போது விண்டோவினை மூடி விடவும் இனி இதற்கான விதிமுறைகளை அமைக்க வேண்டும்.




அதற்கு Tools,message rules ஆகியவற்றை வரி சையாக கிளிக் செய்திடவும். அதன் பின் mail என்பதனை தேர்ந்தெடுக்கவும். இங்கு New என்பதில் கிளிக் செய்திடவும் இதில் உள்ள முதல் பெட்டியின் இறுதியில் உள்ள For all messages என்பதனை தேர்ந்தெடுக்கவும். இரண்டாவதாக உள்ள பாக்ஸில் Reply With message என்பதனை தேர்ந்தெடுக்கவும். மூன்றாவது பொக்ஸில் message என்று இருக்கும் லிங்கில் கிளிக் செய்திடவும். இப்போது புதிய மெனு ஒன்று காட்டப்படும். இதில் நீங்கள் சேவ் செய்த டெக்ஸ்ஜ பைலை பிரவுஸ் செய்துபார்க்கலாம்.

**இவ்வார இணையத் தளம்**

அந்த பைலை தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். நான்காவது பொக்ஸில் இதற்கான விதியை அமைக்கலாம்.Auto reply என அதனை அமைத்து ஒகே கிளிக் செய்திடவும். இப்போது இன்னொரு விண்டோ ஒன்று வரும். இது நீங்கள் அமைக்க விரும்பும் விதியை உறுதிசெய்வதற்காக இதில் Apply now என்றிருப்பதை கிளிக் செய்திடவும். அடுத்ததாக ஒரு ஸ்கிரீன் உங்களுக்கு காட்டப்படும்.

இது நீங்கள் தேர்ந்தெடுத்த விதியினை எங்கு வைத்திட என்று கேட்கும் உங்களுக்கு தேவையான போல்டரை இங்கு செலக்ட் செய்திட வேண்டும் . Inbox ஐ இங்கு தேர்ந்தெடுக்கவும். இப்போது மீண்டும் Apply now என்பதை தேர்ந் தெடுக்கவும் மீண்டும் ஒகே கிளிக் செய்து முடித்து விடலாம் அவ்வளவு தான் வேலை முடிந்தது. உங்களக்கு வரும் மெயில்களுக்கு உங்கள் இமெயில் கிளையண்ட் புரோகிராம் தானாக பதிலை அனுப்பி வைக்கும். நீங்கள் யாஹூ மெயில் வைத்திருக்கிறீர்களா? அப்படியானால் Options, vacation Response என்பதை தேர்ந்தெடுக்கவும். நீங்கள் எந்ததிகதியிலிருந்து எந்த திகதி வரை பதில் அனுப்பும் நிலையில் இருக்க மாட்டீர்கள் என்பதை செட் செய்திட வும்.

அதன் பின் உங்கள் டெக்ஸ்டை டைப் செத்திடவும் இதனை டைப் செய்து முடித்த பிறகு Turn auto response on என்பதை கிளிக்செய்திடவும். இதேபோல்நீங்கள் மெயில் அக்கவுண்ட் வைத்திருக்கும் அனைத்து சேர்வர்களிலும் இந்த வசதி தரப்பட்டிருக்கும் மெனுவிற்கு சென்று இதனை தேடி அமைத்துக் கொள்ளலாம்.



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம்பெற்று 23 ஆண்டுகளின் பின் யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணியை நேற்று ஊர்காவற்றுறை மக்கள் கௌரவித்தனர். நேற்றுக்காலை 9 மணிக்கு வங்களாவடியில் இருந்து அலங்கரிக்கப்பட்ட வானில் அழைத்துவரப்பட்ட புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணி, கல்லூரி அதிபர் ஜே.ஏ.ஜெகதாஸ், அணியின் பயிற்றுவிப்பாளர் சுயாற் ஆகியோர் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் ஊர்காவற்றுறை சிவன்கோவிலில் இருந்து உடற்பயிற்சி அணியினர், கல்லூரி அதிபர், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கல்லூரியின் பான்ட் வாத்திய இசையுடன் மக்களின் வாழ்த்துக்களுடன் பிரதான வீதியூடாக கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டார்கள். கல்லூரிக்கு அழைத்து வரப்பட்ட துலக்ஷன் தலைமையிலான உடற்பயிற்சி அணியினர் தமது சாதனை உடற்பயிற்சியை நிகழ்த்தினர். இவற்றையே படங்களில் காண்கிறீர்கள் (படங்கள்: ஆர்.யூ.பாலமுருகன்)

## இந்தியப் பயணத்தில் மாற்றமில்லை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு திட்டமிட்டபடி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இம் மாதம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகளில் ஆடத் திட்டமிட்டுள்ளது.

இதனிடையே கடந்த 3 தினங்களுக்கு [illegible]ர் டில்லியில் நடைபெற்ற குண்டு வெடி[illegible] சம்பவம் அவுஸ்திரேலிய வீரர்கள் மத்தி[illegible] அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்ப[illegible]றது.

கு[illegible] வெடிப்பை அடுத்து இந்தியா விலு[illegible] பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்[illegible] செய்ய குழுவொன்றை அனுப்ப அவு[illegible]ரேலிய கிரிக்கெட் சபை முடிவு செய்த தாக[illegible] செய்திகள் வெளியாகின.

இந்தக் குழுவின் அறிக்கை அடிப்படையிலேயே அவுஸ்திரேலியா இந்தியப் பயணத்தை மேற்கொள்ளுமா அல்லது இரத்துச் செய்யுமா என்பது பற்றி முடிவு செய்யும் என்றும் கூறப்பட்டது.

எனினும் இந்தியாவில் விளையாடுவது மிகவும் பாதுகாப்பானது என்று இந்திய கிரிக்கெட் சபை உறுதியளித்தது.

பாகிஸ்தானில் உள்ளதுபோல இந்தியாவின் நிலைமை மோசமாக இல்லை என்றும் கிரிக்கெட் சபை தெளிவு படுத்தியது.

இந்நிலையில் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி திட்டமிட்டபடி இந்தியப் பயணத்தை மேற்கொள்ளும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை செய்தித் தொடர்பாளர் பீற்றர் ஜென் கூறியுள்ளார்.

பாதுகாப்பு நிலை குறித்து நடத்தப்படும் ஆய்வு குறித்து விவாதிக்கப்படும் என்றாலும் இப்போதைக்கு இந்திய சுற்றுப்பயணத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய மேலாளர் இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு பேசியதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே பாகிஸ்தானில் பாதுகாப்பு காரணங்களுக்காக விளையாட மறுத்துவிட்டு இந்தியாவில் விளையாடினால் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதாக புகார் எழலாம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை பொது மேலாளர் மைக்கெல் பிறவுண் கூறியுள்ளார்.


எனினும் இரண்டு நாடுகளின் நிலைமை வேறானது என்று பீற்றர் ஜென் தெரிவித்துள்ளார். (5)

# இந்தியன் கிரிக்கெட் லீக்கில் விளையாட பங்களாதேஷ் அணியில் 6 வீரர்கள் ஓய்வு?

(டாக்கா)

இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பில் 14 பங்களாதேஷ் வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இவர்கள் இடம்பெற்றுள்ள அணிக்கு தாகா வாரியர்ஸ் என பெயர் வைக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.





இந்தியன் கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ) சவாலாக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு, இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்).

இந்த அமைப்புக்கு பி.சி.சி.ஐ மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை அனுமதி வழங்கவில்லை. தவிர ஐ.சி.எல் தொடரில் பங்கேற்கும் வீரர்கள்,தேசிய மற்றும் உள்நாட்டு அணிகளில் விளையாடவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### தாகா வாரியர்ஸ்

இந்நிலையில் பங்களாதேஷைச் சேர்ந்த 14 வீரர்கள் ஐ.சி.எல் அமைப்பில் இணையவுள்ளதாக செய்திகள் வெளியானது. பங்களாதேஷ் அணியின் முன்னாள் தலைவர் ஹபிபுல் பஷார், முகமட் ரபீக் உள்ளிட்ட 8 ஓய்வு பெற்ற வீரர்களும் தற்போது அணியில் விளையாடி வரும் அலோக் கபாலி, அப்தாப் அகமட், நிஜாமுதீன், நபீஸ், பர்கத் ரேசா, திமான் கோஷ் ஆகிய 6 வீரர்களும் ஐ.சி.எல் அமைப்பில் சேரவுள்ளதாக தெரிகிறது.

இவ் வீரர்கள் ஐ.சி.எல் தொடரில் விளையாட அனுமதியளிக்குமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் விரைவில் கடிதம் அனுப்பவுள்ளனர்.

தாகா வாரியர்ஸ் அணிக்கு தலைவராக செயல்படுமாறு முகமெட் அஷ்ரப்புல்லிடம் கேட்கப்பட்டது.

ஆனால் ஐ.சி.எல் வாய்ப்பை அஷ்ரப்புல் புறக்கணித்து விட்டார்.

### வீரர்கள் ஓய்வு?

தங்கள் விருப்பத்தை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நிராகரித்து விட்டால் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாகவும் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வமைப்பில் இணையும் வீரர்களுக்கு மூன்று ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 86 இலட்சம் தருவதாக ஐ.சி.எல் அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணியில் விளையாடி வரும் வீரர்கள் ஆண்டுக்கு ரூபா 13 இலட்சம் மட்டுமே பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## போர்முலா 1 கார்ப்பந்தயத்தில் ஜேர்மனி வீரர் புதிய சாதனை

இத்தாலியில் நடைபெற்ற போர்முலா 1 கார்ப்பந்தயத்தில் ஜேர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் குறைந்த வயதில் வெற்றி பெற்ற வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த பருவகாலத்திற்கான போர்முலா 1 கார்ப்பந்தயம் உலகம் முழுவதும் 18 இடங்களில் நடந்து வருகிறது.

இதன் 14-வது சுற்றுப் பந்தயமான இத்தாலி கிராண்ட் பிரிக்ஸ் போட்டி மோன்சாவில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் முன்னிலை வீரர்கள் தடுமாறிய நிலையில் யாரும் எதிர்பாராத வகையில் டோரா சோரா அணி வீரரும் ஜேர்மனியைச் சேர்ந்தவருமான செபாஸ்டியன் வெட்டல் வெற்றி பெற்றார்.

பந்தய தூரத்தை ஒரு மணி 26 நிமிடம் 47 விநாடிகளில் கடந்த வெட்டல் போர்முலா 1 பந்தயத்தில் குறைந்த வயதில் வெற்றி பெற்ற வீரர் என்ற புதிய வரலாற்றை படைத்திருக்கிறார்.

அவருடைய தற்போதைய வயது 21 ஆண்டு 74 நாட்களாகும்.

இதற்கு முன்பாக ஸ்பெயினின் பெர்னாண்டோ அலான்சோ அச்சிறப்பைப் பெற்றிருந்தார். இவர் 2003 ஆம் ஆண்டு கங்கேரி கிராண்ட் பிரிச்சில் வெற்றி பெற்ற போது அவரது வயது 22 ஆகும்.

தனது முதல் வெற்றியை ருசித்த செபாஸ்டியான் என்னால் இதை நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியை விபரிக்க வார்த்தைகள் கிடைக்கவில்லை. இது எனது வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத தருணம் என்று பூரிப்புடன் கூறினார்.

இந்தப் போட்டியில் அவரை விட 12.5 விநாடிகள் பின்தங்கிய மெக்லரன் அணி வீரர் கோவலையென் 2-வது இடத்தைப் பெற்றார் . (5)

# முறிகண்டி-அக்கராயன் பகுதிகளில் மீண்டும் நேற்று யுத்தம் வெடித்தது

## பெரும் தாக்குதல் என இரு தரப்பும் தெரிவிப்பு

(கொழும்பு)

**முறிகண்டி-அக்கராயன் வீதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுப் பெரும் போர் வெடித்துள்ளது. இத் தாக்குதலினை இரு தரப்பினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். இத் தாக்குதல்கள் குறித்து விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

முறிகண்டி-அக்கராயன் வீதியில் படையினர் பெருமெடுப்பில் மேற்கொண்டுள்ள தாக்குதலுக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்தும் தாக்குதலில் பெருமளவிலான படையப் பொருள்கள், படை உடலம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

முறிகண்டி-அக்கராயன் வீதியிலுள்ள முதலாம், இரண்டாம் கட்டைப் பகுதியைக் கைப்பற்றும் நோக்குடன் தாக்குதலைத் தொடுத்த படையினர் மீது நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இதுவரையான தாக்குதல்களில் பெருமளவிலான படையப் பொருள்கள், படை உடலம் ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

படையினருக்கு எதிரான தாக்குதல்களை விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகள் தீவிரமாக நடத்திக் கொண்டிருக்கின்றது என விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அக்கராயன் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர் என்று படைத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவை மேலும் தெரிவித்ததாவது, அக்கராயனுக்குத் தெற்குப் புறமாகவுள்ள முன்னணிக் காவலரணிலிருந்து அக்கராயனுக்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள விடுதலைப்புலிகளின் முன்னணி நிலைகள் மீது-முறிகண்டிப் பக்கமாகவுள்ள ஏ-9 பாதையை கைப்பற்றும் நோக்குடன் நேற்றுப் படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

படையின் 4 பட்டாலியன்களைச் சேர்ந்த சிறப்புப் படையினர் இந் நடவடிக்கையில் இறக்கப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை தொடங்கப்பட்ட படையினரின் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி மற்றும் இம்ரான்-பாண்டியன் அணிகளைச் சேர்ந்த 5 குழுக்கள் சமருக்கென அக்கராயன் பிரதேசத்திற்கு விடுதலைப்புலிகளின் பிரதான படையணிகள் நகர்த்தப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, 57-வது படையணித் தளபதி ஜெகத் டயஸ் மற்றும் 58-வது படையணியின் கூட்டுத் தளபதிகளான பிரிகேடியர் சவீந்திர டீ சில்வா, நிர்மல தர்மரட்ண ஆகியோரின் திட்டத்திற்கேற்ப இந்த வலிந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர் என்று படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## ஐ.நா. பணியாளர்கள்...

இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது என்றார். இது தொடர்பில் கோல்டன் வெய்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா பணியாளர்கள் அனைவரும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஒரே வாகனத் தொடரணியில் கிளிநொச்சியிலிருந்து அழைத்துவர போகின்றோம். எங்களின் இந்தப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் வாகனங்களுக்கு ஓமந்தைச் சோதனைச் சாவடி வரை விடுதலைப் புலிகள் பாதுகாப்பு அளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

தற்போதைய சூழலில் தொடர்ந்து கிளிநொச்சியில் தங்கிபணியாற்றுவது என்பது மிகவும் ஆபத்து நிறைந்ததாக மாறிவிட்டதாக எங்களின் பாதுகாப்பு மதிப்பீட்டில் தெரிய வந்திருப்பதால் நாங்கள் அங்கிருந்து தற்காலிகமாக இடம்பெயர வேண்டிய சூழலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

ஐ.நா. மனித நேயப் பணிகளை வவுனியாவிலிருந்து மேற்கொள்வதற்காக மூத்த அதிகாரிகள் வவுனியாவிற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என கோல்டன் வெய்ஸ் தெரிவித்தார்.

உலகின் மற்ற பகுதிகளிலிருக்கும் நடைமுறைப்படி ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை யார் தங்கள் கட்டுபாட்டில் வைத்திருக்கிறார்களோ அவர்களே அங்கு பணிசெய்யும் மனித நேயப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். எனவே இதை நாங்கள் அவர்களுக்கு மிகத் தெளிவாக உணர்த்தினோம். வன்னியில் சண்டைகள் தீவிரமடைந்து வருகின்றன. மோதல்கள் கிளிநொச்சிக்கு மிக அருகாமையில் வந்து கொண்டிருக்கின்றன. தினந்தோறும் ஷெல் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றனஎன அவர் மேலும் கூறினார். (ச-3)

## தமிழ் மக்களின் பாதுகாப்...

ருந்து அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேறுமாறு இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கும் நிலையிலேயே பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாக இந்தியா தனது அக்கறையைச் செலுத்தியுள்ளது.

இதேவேளை தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் யுத்தத்திற்கு இந்திய மத்திய அரசாங்கம் உதவிகளை வழங்குவதாகத் தமிழகக் கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தன.

வவுனியாக் கூட்டுப் படைத் தளம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் போது இந்திய ராடர் தொழில்நுட்பவியலாளர்கள் இருவர் காயமடைந்திருந்தனர். இதனைக் கண்டித்திருந்த தமிழகக் கட்சிகள் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா உதவக் கூடாது எனக் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-5)

## வன்னி மக்களுக்கு...

அதிகாரிகளும் இந்தக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

தொண்டு நிறுவனங்கள் வன்னிப்பிரதேசத்தில் இருந்து வெளியேறி வருகின்ற சூழலில் அங்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மதவாச்சி, ஓமந்தை சோதனைச்சாவடிகளின் ஊடாக நிவாரணப் பணிகளுக்குத் தேவையான பொருட்களை வன்னிப்பகுதிக்குக் கொண்டு செல்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருந்ததாகவும், அந்தச் சிக்கல்கள் தற்போது மேலும் அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவைகள் யாவும் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கை அடிப்படை சார்ந்த பிரச்சினைகளாக இருப்பதாகவும், எனவே இவற்றிற்குத் தீர்வு காண்பதற்காக இவற்றை அரசாங்க உயர் மட்டத்தினரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல இருப்பதாகவும் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை தொண்டு நிறுவனங்களின் வெளியேற்றத்தையடுத்து வன்னிப் பகுதியில் இடைநிறுத்தப்பட்டுள்ள நிவாரணப் பணிகளை உடனடியாக அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்குமாறும் நிவாரணப் பணிகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ள பொருள்களையும் அவர்களிடம்கையளித்து, அந்தப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வழி செய்யுமாறும் அரசாங்கம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஐ.நா. நிறுவனங்களை வழி...

தேசத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் தீவிரமாக மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அந்தப் பகுதியில் தொண்டு நிறுவனங்களின் பாதுகாப்பை தங்களால் உறுதிப்படுத்த முடியாது என தெரிவித்துள்ள அரசாங்கம், அந்த நிறுவனங்களை அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறி வவுனியாவிலிருந்து செயற்படுமாறு அறிவித்துள்ளது.

இதனையடுத்து ஐ.நா. நிறுவனங்களும் வேறு பல நிறுவனங்களும் வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேறத் தொடங்கின. இதனால் அந்தப் பிரதேசத்தில் யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான தற்காலிக இருப்பிட வசதிகளை வழங்குவதிலும் அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வ திலும் தொண்டு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிவாரண வேலைத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்து ஐ.நா. அமைப்புக்களும் மற்றும் நிறுவனங்களும் மனிதாபிமான பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து மக்கள் இந்த அலுவலகங்களுக்கு எதிரே தமது மறியல் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான பணிகளில் ஐ.நா. நிறுவனங்கள் ஈடுபட வேண்டும் என்பது கடப்பாடு என்பதைச் சுட்டிக்காட்டி அந்த மக்கள் தமது மறியல் போராட்டத்தை நடாத்தி வருகின்றார்கள். (ச-5)

## அரசு வழங்கிய காலக்கெடு...

நிறுவனங்களை உடனடியாக வெளியேறுமாறு கடந்த 8 ஆம் திகதி அரசாங்கம் அறிவித்தது என குறிப்பிட்ட அமைச்சர், எனினும் தமது அலுவலகங்களை மூடிவிட்டு உடைமைகளுடன் வெளியேறுவதற்கு 3 வாரங்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டும் என ஐ.நா. ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் கூறினார்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் வெளியேற ஐ.நா. ஸ்தாபனங்கள் இணங்கியுள்ளன. வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனித நேயப் பணிகளை அரசாங்க அதிபர்களுடாக அரசாங்கம் முன்னெடுக்கும்.

அப் பகுதியிலிருக்கும் நிர்வாகக் கட்டமைப்புக்களினூடாகக் கூடுதலான மனித நேய உதவிகளை அரசாங்கமே இதுவரை வழங்கி வருகின்றது.

அரசாங்கம் மேற்கொள்ளும் மனித நேயப் பணிகளுக்கு மேலதிகமானவற்றையே ஐ.நா. ஸ்தாபனங்கள் மேற்கொண்டு வந்தன என்றார் அவர். (ச-5)

2 வது பிரிவு ஆரம்பம் :-
19.09.2008
தெளிவான முறையில்...
இலகு தமிழ் விளக்கத்துடன்...
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பருத்தித்துறையில் :- OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE
19.09.2008 (Friday) - 4.00 pm
நெல்லியடியில் :- MATHS CENTRE இல்
19.09.2008 (Friday) - 3.00 pm
By.Jyothy
(அனுமதிக்கு முந்துங்கள்)
(C-1569)

## விடுதிகளில் தற்காலிகமாகத்...

பேலியாகொடவில் 9 பேரும் டாம் வீதியில் 8 பேரும் ஆட்டுப்பட்டித் தெருவில் 9 பேரும் மருதானையில் 8 பேரும் கொட்டாஞ்சேனையில் 6 பேரும் கிராண்ட்பாஸில் 6 பேரும் தெமட்டகொடவில் 7 பேரும் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் காரணமின்றி தங்கியிருப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் லொட்ஜ்களிலும் தற்காலிக வசிப்பிடங்களிலும் தங்கியுள்ள தமிழர்கள் கைது செய்யப்படுகின்றமை பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகப் பலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தமிழர்களை விடுவிக்கும் முயற்சியில் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் ஈடுபட்டுள்ளதாக அமைச்சரின் அலுவலகம் தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டதுடன் உடனடியாகவே கொழும்பில் தங்கியிருக்காது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் எனப் பொலிஸாரினால் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.